
# தாயகம்



2

Best copy available.

# நாவலர் என் தோழர்!

க. அன்பழகன் M.A.

மாநாடு என்றால், தலைவராக இருப்பதற்கு—ஒரு திவான்பகதூர், அல்லது சர், ஓர் ஜமீந்தார் அல்லது லட்சாதிபதிதான் ஏற்றவர் என்று எண்ணிக் கிடந்ததுதான் நம் நாடு! ஆனால் அது ஒரு காலம் என்றாகி விட்டது இன்று! மாநாட்டின் தலைவர் ஓர் இளைஞர். முப்பத்தாறு அகவைகளே நிரம்பியவர். இளமையிலே தாடியோடு கூடக் காட்சியளித்தவர் எனினும், இளமையின் எழிலை மிகுத்துக்காட்டத்தான், அலை அலையாகத் தவழ்ந்து கரிய முகிலெனக் காட்சி தந்த அந்தத் தாடியும் பயன்பட்டது. அதனாலன்றோ, வெண்தாடி வேந்தரோடு, உடன் நின்று பணியாற்றிய காலை, இளந் தாடி என்ற அடைமொழியையும் அவர் பெற்றார்.

ஒவ்வொரு மாவட்டமும் அவரைத் தத்தம் மாவட்டத்திற்குச் சொந்தமானவர் என்று உரிமை கொண்டாடின.

தஞ்சை, தன் மண்ணிலே பிறந்தவர் என்று பெருமை கொண்டது. தென்னார்காடு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்தபோதுதான், நமது கொள்கைகளை முழக்கலானார் என்று புகழ் தேடிற்று. கோவை, தன் மாவட்டத்திலேதான் பொதுத் தொண்டிலே ஈடுபட்டார் என்று சிறப்பித்துக்கொண்டது. சேலம்—அவரை மாப்பிள்ளையாகக் கொண்ட பெருமை எமக்கே என்று மார் தட்டிற்று. மதுரை அவருடைய புகழ் மிக்க பெயரே எமது பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுடையதல்லவோ! என்று உரிமை கொண்டாடிற்று. சென்னை-எமது மாவட்டத்திலேதானே அவர் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று உரிமை பேசிற்று. திருச்சி—எமது தலைநகரில்தானே அவர் தலைமை ஏற்றார் என்று பூரித்தது. செங்கல்பட்டு-என்னதான் கூறட்டும் அண்ணாவின் தம்பி என்றுதானே அவரே கூறிக்கொள்கிறார், அது போதாதா எமக்கு என்றது. வட ஆர்க்காடும், இராமநாதபுரமும், நெல்லையும், நாஞ்சிலும்,-அவர்தான் —'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கொள்கை நெஞ்சினராய்—எல்லோரும் இன்புற்றிருக்கும் வழி தேடி அலையும் உள்ளத்தினராய், திராவிடத்திற்கு உழைப்பவராயிற்றே? அவரை எமக்கு, எமக்கு என்று சொந்தம் கொண்டாடினால் மட்டும் மற்றவர்கள் விட்டுவிடுவார்களா? அவர்தான்—இன்று பொதுச் செயலாளராகிவிட்டாரே? பொது தானே இனி அவர்? அவர் எமக்கும் வேண்டும் என்றுதானே பொதுச் செயலாளர் ஆக்கிக்கொண்டோம்? இன்னும் என்ன தனி உரிமை? என்று கேட்பதுபோல், அன்பைப் புலப்படுத்தி நின்றன!

அவரைத் தலைமை ஏற்க அழைத்த அண்ணா அவர்கள் "தம்பி வா, தலைமை ஏற்க வா, உன் ஆணைவழி நடப்போம் வா" என்று கூறிய போது-மாநாட்டார் பெற்ற உணர்ச்சி எடுத்தியம்பக்கூடியதன்று, உள்ளம் உடல் அணு ஒவ்வொன்றும் சிலிர்க்க இன்பக் கூத்தாடினர் மக்கள். "இதுவன்றோ 'குடும்பப்பாசம்' இலட்சியத் திருவிளக்கை அணையாது காக்கும் நெறி" என்று போற்றினர்.

பதினாறு ஆண்டுகட்கு முன்பு-அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இடைநிலை வகுப்புக்களில் நானும் அவரும் பயின்ற காலம் — மனக் காட்சியில் இடம் பெறுகிறது.

அவர் ஒரு 'நாராயணசாமி' அவ்வளவுதான் எனக்குத் தெரியும். நான் ஓர் 'இராமையா' என்பதுடன் மேடையிலும் பேசுவேன் என்பது அவருக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் நெருங்கிப் பழக வாய்ப்பில்லை. நான் ஓர் நாடோடியைப்போன்று—எதிலும் சிறிது அலட்சியத்துடன் ஆனால் துணிச்சலுடன் விரும்பியதைப் பேசித் தீருவேன். அவரோ அடக்க ஒடுக்கமாக இருக்குமிடந்தெரியாமல், தான் உண்டு தன் கல்வியுண்டு என்ற போக்கிலே இருந்தார். நாங்கள் இரு துருவங்கள் — மனநிலையில். எனவே சந்திப்பு—உள்ளச் சந்திப்பாகவில்லை.

எப்படியோ, இடைநிலை வகுப்பு முடிந்தவுடன், தமிழ்ச் சிறப்பு வகுப்பில் இருவரும்சேர்ந்தோம்.

விடுமுறையில் ஊர்சென்றிருந்த நாராயணசாமி — திரும்பும்போது இளந்தாடியுடன் வந்து சேர்ந்தார். அது அவரைப்பற்றி—நன்றாக அறியத் தூண்டுகோலாயிற்று. அப்போதுதான் அவரது குடும்பமே சுயமரியாதைக் கொள்கையில் ஊறியது என்பதை அறிந்து வியந்தேன். அவரது தந்தையார்—அரசாங்க அலுவலில் இருந்தும், தன்மான இயக்கத்திலும் — தமிழ்ப் பற்றிலும் தலைநின்றார். அவரது தமையன் பட்டுக்கோட்டை சௌரிராசன் குடியரசு ஏட்டிலேயே கட்டுரைகள் தீட்டித் தொண்டாற்றியவர். அவரது இளவல் செழியனும் எம்மோடு பயின்றவர், கொள்கை ஆர்வத்தினர். இவற்றை அறிந்ததுமே அவரிடம் நான் வைத்த மதிப்பு வளரலாயிற்று.

பல்கலைக் கழக மேடைகளில்-நமது கொள்கை அடிப்படையில் ஓரிரு ஆண்டுகள் வரை நான்மட்டுமே பேசவேண்டிய நிலையிருந்தது. வேறு எவரும் பேச முன்வரார். ஒவ்வோர் அமையம் என்னை ஆதரித்துப் பேசுவாரும், அடுத்த தடவையில் கைவிட்டுவிடுவர். தொடர்ந்து என்னை ஆதரிக்கவோ—என் வாதத்தைச் சரியென்று ஆமோதிக்கவோ-மாற்றுக் கட்சித் தோழர்களிடம் — நமது கொள்கைக்காக வாதிடவோ வேறு எவரும் முன்வராத நிலை. அந்நிலையில், காண்போர் எவரிடமும்—கண்டு பேசும்போதெல்லாம், சான்று காட்டி, ஆதாரத்துடன் நமது கொள்கையை நிறுவும் பணியை இடைவிடாது செய்துவந்தார் நாவலர். எந்நிலையிலும் உணர்ச்சி வயப்பட்டு விடாமல் தெளிவுடன் பேசும் திறமை —பலரை அவர்பக்கம் திருப்பியது. நான் அன்பழகனாக பெயர் மாற்றிக் கொண்டபோது அவர் நெடுஞ்செழியன் என்று பெயர்கொண்டார். அதுவும் எங்களது கொள்கை உறுதியை —மாணவ உலகம் உணரத் துணை செய்தது. நான் உணர்ச்சி வயப்படும்போதும் — மாற்றுக் கட்சியினரிடம் சிக்கிக்கொள்ளும்போதும் — உடன் இருந்து சிக்கலை நீக்க, தகராறைத் தவிர்க்க ஆவன செய்வார். அவருக்கு மேடைப் பேச்சில் ஆர்வமும் துணிவும் உண்டாக நான் காரணமாக இருந்தது போலவே, எனது பேச்சிலே கொள்கை விளக்கத்திலே உள்ள தவறுகளை — ஆராய்ந்து கூறி விலக்கவும், தீவிரப்பேச்சை அமைதிப்படுத்தவும், துணை செய்தவர் அவர். நான்மட்டுமே பேசிய காலத்தில் அதை மதிக்காதவர்களும், என்னை ஓர் வெறியன் என்று கருதி அலட்சியப்படுத்துகிறவர்களும், அவரும் பேசத் தொடங்கிய பின்னரே—என்னையும் மதிக்கலானார்கள். நாங்கள் ஏறத்தாழ சேர்ந்தே வளர்ந்தோம். இன்றைய நெடுஞ்செழியனை

உழைப்பால் உயர்ந்த ஒருவர்
முயற்சியால் வளர்ந்த ஒருவர்
ஒழுங்கால் மேம்பட்ட ஒருவர்
உண்மையால் சிறந்த ஒருவர்
உறுதியால் புகழ்பெற்ற ஒருவர்
கொள்கையால் ஓங்கிய ஒருவர்

என்று கூறுவது பொருந்தும்.

அதனால்தான் அண்ணா அவர்கள் அடிக்கடி நினைவூட்டும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவை அவருக்கு இயல்பாகிவிட்டன.

கண்ணியம்-அவருடன் பிறந்தது
கடமை-அவருடன் வளர்ந்தது
கட்டுப்பாடு-அவருக்கே இயல்பானது

அவருக்குக் கிடைத்தபெருமையில் எனக்கும் சிறிது பங்குண்டல்லவா? ஒன்றாகப் படித்தோம், உண்டோம்; உறங்கினோம், உலவினோம், எனவே அவரை, 'என் தோழர்' உற்றநண்பர் என்று உரைப்பதிலே நான் பெருமிதம் கொள்ளமுடிகிறது,

"உன் தோழனைக் கூறு நீ யாரென்று நான் கூறுகிறேன்" என்று ஒரு பழமொழி உண்டல்லவா?

அந்த முறையில் — 'நாவலர் நெடுஞ்செழியன் என் தோழர்' என்றால் எனக்குப்பெருமையே அல்லவோ?

★



பொன்னிக் கரையில்

# நான்கு நாட்கள்!

'காவிரிக்கரையைப்பார்த்திருக்க வேண்டும் நீங்கள்! அடடா, எப்படியிருந்தது தெரியுமா?' என்றார் நண்பர். 16-ந்தேதி காலையில் திராவிடத்தின் திசையெலாமிருந்து கூடிய தி. மு. க. தோழர்கள், போர்க்களம் புறப்படுமுன் தண்டு இறங்குவதுபோல, பொன்னிக் கரையிலே முகாமடித்திருந்தனராம்! ஒவவொரு ஊரிலிருந்தும் தத்தம் கிளைக் கழகப் பெயர் பொறித்த கொடியைக்கொண்டு வரும்படிமாநாட்டினர் அன்பழைப்பு விட்டிருந்தனரல்லவா? அதன்படி கொடியேந்தி வந்த அனைவரும், சிந்தாமணியிலிருந்து புறப்படும் தலைவர் ஊர்வலத்தில் கலந்து கொள்வதறகாக காலை மணி-4 முதலே காவிரிக் கரையில் குழுமி விட்டனராம! குளித்து மூழ்கி, குதூகலத்தோடு ஊர்வலத்தில் கலந்துகொள்வோம் எனும் ஆசையில், அனைவரும் தத்தமது கரத்திலிருந்த கொடிகளை கரையோரம் நட்டுவைத்துவிட்டு, ஆற்றுக்குள் இறங்கினராம். அவ்வண்ணம் கொடிகள் நட்டுவைக்கப்பட்டிருந்த அழகைத்தான் நான் கண்டிருக்கவேண்டும் என்றார் நண்பர். காலைக் கதிரவனின் பொன்னொளி வீச, காவிரிச் சோலையின் சிலுசிலுவென்ற தென்னங் காற்று அடிக்க, ஒருமைலுக்குக் கரையோரம் ஒரேகொடிமயமாகக் காட்சி அளித்ததாம்! அந்த அழகு, கண்களுக்கும் கருத்துக்கும் காணக் கிடைக்காத விருந்து என்றார், நண்பர். உண்மைதானே! ஒருவரா, இருவரா, ஆயிரக் கணக்கான தோழர்கள் அனைவரது கரத்திலும் இருவண்ணக் கொடிகள், எப்படியிருந்திருக்கும் அம்மாட்சி?

"அடடா! முன்பே தெரிந்திருந்தால் வள்ளுவர் நகரிலிருந்து மூன்றுமைல் ஓடிவந்திருப்பேனே?" என்றேன்.

"சரி! ஊர்வலத்தையாவது பாருங்கள்" என்றார்.

மணி பத்து; காலைச் சூரியனின் கிரணங்கள், சீறிவரும் விடுதலைப் படைபோல எழுந்து கொண்டிருந்தன. அதோடு போட்டிபோடுவதுபோல தி. மு. க. காளையரும், வரிசை வரிசையாக நிற்கலாயினர்! ஒவ்வொரு மாவட்டம், அதன் பின்னர் அங்கங்கேயுள்ள கழகங்களின் பெயர்கள் பொறித்த கொடிகள். இவ்விதம், ஏறத்தாழ இருமைல் தொலைவுக்கு நின்றது ஊர்வலம். அதுமட்டுமா? சில

அரங்கண்ணல்

மாவட்டத்தினர் தமது சிறப்பினை விளக்க தாரையும் தப்பட்டையும், ஆனந்தக் கூத்தும் கூட ஏற்பாடு செய்திருந்தனர். அதிர் வேட்டுகள் ஒருபுறம்! யானை, தமிழ் மறவரின் பெருமிதச் சின்னம்போல! புரவி மீது தொண்டர் படைத் தளபதி ஷரீப்! இருவண்ண உடையணிந்த தொண்டர்கள் நூற்றுக் கணக்கில்! வாத்திய முழக்கங்கள்! கீதம்! இதையெல்லாவற்றையும் தோற்கடிக்கும் விதத்தில், 'திராவிட நாடு திராவிடருக்கே' எனும் முழக்கம்.

அப்பப்ப, ஓடி ஓடி கண்டேன்— ஒய்யாரமாக பவனி வந்த நமது பொதுச் செயலாளரையும் அவரை ஆனந்தமுடன் திருச்சியின் வீதிகளிலே அழைத்துச் சென்ற நமது வீரப் பெரும்படையையும் கண்டபோது, மாண்ட நம் பழைய வீரம் மனக்கண்முன் வந்தது! அணி தேர்ப்புரவி ஆட்பெரும் படையும், அழகுப் பவனியும், மக்களின் மனம் நிறைந்த வாழ்த்தும் ஏற்று அந்த நாள் மன்னர்கள் பவனி வந்ததாகப் படித்ததுண்டு ஏடுகளில் — பார்க்கும் பாக்கியம் அன்றுதான் கிடைத்தது! அற்றை நாள் மன்னர்கள், இப்படித்தான், பவனி சென்றிருப்பர் என்று எடுத்தியம்புவதுபோல இருந்தது ஊர்வலம். நகரின் முக்கிய இடமெல்லாம் நாவலருக்கு வழங்கப்பட்ட மாலைகளும், மரியாதைகளும் அனந்தம்! அவைகளை ஒருசேரத் திரட்டினால், இன்னொரு 'மலைக்கோட்டை' எப்படி வந்தது இங்கே, என்றே திகைத்திருக்கும் திருச்சி! அவ்வளவு கோலாகலமாக வந்த மாபெரும் ஊர்வலம், ஜி. பி. சோமசுந்தரம், என். வி நடராசன், மு. கருணாநிதி, மதியழகன், அம்பில் ஆகியோர் புடைசூழ பொதுச் செயலாளருடன் வள்ளுவர் நகருக்குள் நுழைந்தபோது, புளகாங்கிதம் ஏற்பட்டது ஒவ்வொருவருக்கும். பொதுச் செயலாளர் நேராகக் கொடிமரத்துக்கு வரும் வகையில் இருமருங்கும் தொண்டர்கள் அணிவகுத்து நின்றனர்! அண்ணாவும், சம்பத்தும், நடிப்பிசைப் புலவரும், புரட்சி நடிகரும், இலட்சிய நடிகரும், நடிகமணியும், வில்லாளனும், அறிவழகனும், மதுரை முத்தும் பராங்குசமும், திருச்சி மணியும் வேறு பலரும் நின்று கொண்டு பொதுச் செயலாளரை வரவேற்றனர். நாவலர் வந்ததும் நடைபெற்ற காட்சி என் மனதைப் பரவசப்படுத்திற்று!

நாவலரைக் கண்ட அண்ணா தன் கரத்திலிருந்த மாலையைச் சூட்டி, கொடி கம்பம் நோக்கி இட்டுச் சென்று, கொடியினைக் கொடுத்து ஏற்றுவிக்கச் சொன்ன அக்காட்சியினை என்றென்றைக்கும் மறக்கவியலாது! நாவலர்

வானளாவும் கொடியைப் பறக்க விட்டார். கொடியும் மலர் சொரிந்தது! கூடியிருந்தோரும் நாமணக்க 'வாழ்க வாழ்க' என்று வாழ்த்தினர்! பட்டொளி வீசி, படபட வென்று, இரண்டுபக்கத்திலும் தங்கமுலாம் பூசப்பட்டதுபோன்ற சிங்கங்கள் காவல்புரிய, அழகான சிறு சோலைவனத்துக்குள் அமைக்கப்பட்டிருந்த கொடிக்கம்பத்தில் பறந்தது கழகக் கொடி—களிப்பிலாடும் கானப் புள்போல!

மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக தோழர். என். வி. நடராசன், கலைக் கண்காட்சியினைத் திறந்து வைத்தார். ஏழெட்டு ஓவியர்களும், மாணவமணிகளும் அமைத்திருந்த அந்த அறிவுக் காட்சியின் எழிலை என்னென்பேன்! நடராசனின் திறப்புரைக்குப்பின் நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமியின் இன்னிசை துவங்கிற்று. கே. ஆர். ஆர்., இப்படியும் பாடக்கூடியவர் என்பதை அன்றுதான் கண்டேன்! சித்திரத் தமிழில், முத்து முத்தாய் எண்ணம் உருண்டோட தனக்கென்று வாய்த்த மதுரமிகு சாரீரத்துடன், தமிழிசையைக் கலந்து அவர் தந்தபோது மெய் மறந்தேன் நான். இசைக்குத்தான் எத்துணைசக்திஇருக்கிறது? தெரியாமலா, தேவாரத்தையும் திருவாசகத்தையும் இன்னும் இசைகலந்து ஊட்டத் துடிக்கின்றனர்! இன்னிசைக்குப்பின், தமிழரின் பழம் பெரும் இசையாம் நாதசுரத்தை எடுத்து நாதவெள்ளத்தை நிரப்பினர் இசைப்பெரும் புலவர் திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம்! அதேகலையில் வல்ல ஆருயிர் மைத்துனர் கக்காயி எனப்படும் நடராச சுந்திரம் எனும் கலைஞர் எதிர்பாராதுற்ற நோயால் மரணப் படுக்கையில் ஊசலாடிக் கொண்டுள்ளார் என்பதறிந்தும் கடமைப் பொறுப்பால், வந்திருந்தார் இராசரத்தினம். மக்கள் அவரது திகட்டாத கானத்தைச் சுவைத்துக் கிடந்தனர்! பிறகு கலைவாணர் நமது என். எஸ். கிருஷ்ணன் கருத்தையும் கானத்தையும்கலந்து புத்தரின் வரலாற்றினை வில்லுப் பாட்டின்மூலம் எடுத்துரைத்தார். புத்தமுதுண்டோம் என்று மகிழ்ந்தனர் மக்கள்!

பிறகு, மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையாருக்கு அவரது தாய்க்குலச் சேவையையும் சுயமரியாதைத் தொண்டையும் பாராட்டு முகத்தான் விருது வழங்கும் விழா நடைபெற்றது. அண்ணா எடுத்துத் தந்த வெள்ளிக் கேடயத்தை வாங்கியவண்ணம் ஆனந்தக் கண்ணீர் அலைமோத "பிள்ளைகளே!" என்று அந்தமூதாட்டி அழைத்து தனக்குச் செய்த மரியாதைக்கு நன்றி தெரிவித்துக் கொண்ட காட்சி உள்ள முருக்கிற்று. உழைத்தத் தொண்டர்களுக்கு இதுபோன்ற மரியாதைகள் தரப்படுவது இதுதான் முதல்முறை! இங்குதானே, இதையும் செய்ய முடிகிறது!!

இரவு எஸ். எஸ். இராசேந்திரன் டி.வி. நாராயணசாமி குழுவினரின் "புதுவெள்ளம்" எனும் நாடகம் நடைபெற்றது.

மறுநாள் காலை மலர்ந்தது! திருச்சிக்குள் எங்குபோனாலும், எந்த இடத்தில் திரும்பினாலும் நமது தோழர்கள்தான். கிடைத்ததை உண்டு, அகப்பட்ட இடத்தில் சுருண்டு கிடந்துவிட்டு, அடுத்த பகல் எப்போது வரும் என்கிற ஆவலோடு கிடந்தோர் தொகை ஆயிரமா! பத்தாயிரமா!! மூன்று இலட்சத்துக்கு மேலிருக்கும்!!! இத்துணை பேருக்கும் இடவசதித் தேடித்தர எப்படி இயலும் வரவேற்புக் குழுவினரால்? எனவே நகரின் நானு பக்கங்களிலும் சிதறிக் கிடந்தோரெல்லாம் காலை மலர்ந்ததும், பறந்தோடி வரும் சிட்டுகளைப்போல வந்து குவியலாயினர் வள்ளுவர் நகருக்கு! நகரின் அழகினைப்பற்றி எவ்வளவு எடுத்துரைத்தாலும் போதாது. கம்பீரமான கோட்டை முகப்பு! அதைத் தாண்டியதும், சிங்கங்கள் இரண்டு வரவேற்கும். அதன் இரு பக்கத்திலும், ஒரு புறத்தில் வள்ளுவப் பெருந்தகையின் மாடம், இன்னொரு புறத்தில் புத்தரின் கண் கவரும் சிலைக்கூடம். அவைகளை ரசித்துவிட்டு அப்பாற் சென்றால் குத்தாலம் (தஞ்சை) தோழர்களால் அமைக்கப்பட்ட கிற்று முகப்பு—அடடா! என்ன அற்புத வேலை தெரியுமா? —நுழைந்ததும், பந்தல் ஆரம்பம், அதன் உச்சியிலே ஒரு ஓவியம் வைக்கப்பட்டிருந்தது. ஓவியமா! அது? அல்ல. நாட்டின் எழுச்சிக் காவியம். நம் மருங் கழகம் பெற்று வரும் வீரத்தையும் உறுதியையும் காட்டுவதுபோல, வீறுகொண்ட காளையொருவன், விலங்கொடித்து உந்திக் கிளம்பும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது! அதைப் பார்த்த வண்ணம் உள்ளே நுழைந்துவிட்டால், அதோ, கடுகு போலத் தெரிகிறதே யாரோ நிற்பது, அந்த இடம்தான் மேடையிருக்குமிடம்! "ஏ! அப்பாடா" என்று மலைக்கத் தோன்றும், பந்தலைக் கண்டதும். மூன்று பர்லாங் இருக்கும்! இரண்டு பர்லாங் இருக்கும்! — என்று, எல்லோரும் பேச வேண்டியிருந்தது. அது மட்டுமல்ல, பந்தல் வேலைகள் நடந்து கொண்டிருக்கும்பொழுது ஒரு புறத்திலிருந்து இன்னொரு புறத்துக்குப் போவதென்றால், சைகிள் தேவைப்பட்டது என்றால் பந்தலின் அகல நீளத்தை நீங்களே கணக்குப்போட்டுக்கொள்ளுங்கள்! இவ்வளவு பெரிதாகப் போடப்பட்ட பந்தலும், எப்படிப்பட்ட இடத்தில் தெரியுமா? பாம்புப் புற்றும், கருங்கற் பாறையும், கல்லும், முள்ளும் நிரம்பிக்கிடந்த மைதானம் அது! அதனைத்தான், இவ்வளவு எழிலூராக மாற்றினர்கள், நமது தோழர்கள். பந்தலைப் பார்த்ததும், இருபக்கத்திலும் செல்ல யாருக்கும் ஆசை வரும். கீழ்க்கோடியிலே தோழர் ராபியின் அழகிரி உணவு விடுதி! இப்பால், கலைக்காட்சிக்கூடம்! பிறகு கடைத்தெரு! இதேபோல பந்தலின் மேற்குப் பக்கத்தில் கடைத்தெரு! ஒரு புறத்தில் தொண்டர் முகாம்! தபாலகம்! முதலுதவிப்படைக் கூடாரம்! டெலிபோன்கூடம்! இவ்வளவு ஏற்பாடுகளுடனும் விளங்கிய அந்நகரை, இரவுக் காலத்தில் பார்க்க வேண்டுமே? எங்கிருந்துதான் தோழர் ராபி இவ்வளவு 'டியூப்' விளக்குகளைக் கொண்டு வந்தாரோ, பந்தல் எல்லாம் ஒளி மயம்! பக்கத்தில் இரண்டு மைல் தூரத்துக்கு அப்பால் சென்று மாநாடு நடைபெறும் இடத்தைப் பார்த்தால், 'மைசூர்தான் இங்கு வந்துவிட்டதோ!' என்று ஆச்சரியப்படுகிற விதமாயிருந்தது.

இவ்வளவு எழிலும் ஏற்றமும் பெற்று விளங்கிய வள்ளுவர்நகரில் மாநாட்டின் இரண்டாம் நாள் இசைமுரசு அனீபாவின் எழுச்சிக் கீதத்துடன் ஆரம்பமாயிற்று. அனீபாவின் குரலும் ஆர்வமும் தான் யாவரும் அறிந்ததாயிற்றே! அவருக்குப்பின் சென்னைத் தோழியர் கஸ்தூரி இயக்கக் கீதங்களைப் பொழிந்து, எல்லோரையும் மகிழ்வித்தார். பிறகு பேளுக்குறிச்சி பெரியவர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் வயதேறிய பார்வையை வீசி "வாலிபர்களே!" எனும் அன்

புரையுடன்] ஆரிய தொரு சொற்பொழிவாற்றி மாநாட்டினைத் துவக்கிவைத்தார்.

அவருக்குப்பின் வரவேற்புக் குழுத் தலைவர் அம்பில் தர்மலிங்கம் கழகத்தின் சாதனைகளை விளக்கி மாநாட்டுக்கு வந்திருந்த அனைவரையும்வரவேற்றதோடு மாநாட்டுக்குத் தலைமைதாங்குமாறு தி.மு.க. பொதுச் செயலாளரைக் கேட்டுக் கொண்டார். அதை மாவட்டச் செயலாளர்கள் ஒவ்வொருவரும் வழிமொழியலாயினர்! இந்நிலையில் மாநாடு இடைவேளைக்காகக் கலைந்தது. பிற்பகல், மதுரைத் தோழியர் பி. எஸ். செல்வாவின் மனமகோன இயக்கக் கீதங்களுக்குப் பின் மாநாடு துவங்கிற்று! தலைவரை வழிமொழிந்து பேசினர். சி. வி. எம். அண்ணாமலை பேசிக் கொண்டிருந்தார். எங்கிருந்தோ ஒரு பெரும் புழுதி ஒன்று வேகமாக வந்தது! அதைத்தொடர்ந்து பெருங்காற்று ஒன்று!! சில விநாடிக்கெல்லாம் 'சோ' என்று மழை -சிறிதும் எதிர்பாராத விதத்தில்! கொட்டகையெல்லாம் நீர் வெள்ளம். தாய்மார்கள் தொகையோ பத்தாயிரத்துக்கு மேலிருக்கும்! பந்தலில் ஆடி அசைந்துகிடந்த தொட்டில்களில் இருந்த தங்களது 'தங்கங்களை' யெல்லாம் தூக்கிக் கொண்டு தத்தளிக்கலாயினர் !! அருகில் ஓடி ஒளியவோ, இடம் கிடையாது. இருளோ கவ்வுகிறது! விளக்குகளோ, விட்டு விட்டு எரிகின்றன!! அண்ணா முதல் அத்தனைத் தலைவர்களும் என்ன செய்தனர் தெரியுமோ? தாய்மார்களையெல்லாம் மேடையின்மீது பாதுகாப்புடன் இருக்கச் செய்துவிட்டு ஏழெட்டுக் கார்களை கொண்டு வந்து அவைகளில் அவர்களை ஏற்றிச் சென்றுபோய் அவரவர்கள் போகவேண்டிய இடங்களில் விடுமாறு ஏற்பாடு செய்தனர்! மழையில் நனைந்தபடி நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன் செய்த பணியிருக்கிறதே, அது உண்மையில் பாராட்டத்தக்கதாயிருந்தது. தாய்மார்களின் கவலையை ஓரளவு போக்க முடிந்தது! ஆனால் காவிரியின் வாய்க்கால்கள்போல பந்தலுக்குள் ஓடிக்கொண்டிருந்த தண்ணீர் வெள்ளத்தைக் கண்டபோது, எப்படி இனிமேல் மாநாடு நடக்கும் என்கிற பெருத்த சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. மக்களோ, கொண்டுவந்த மூட்டை முடிச்சுகள் உள்பட நனைந்து தவித்தனர். உட்காரவும் இடம் கிடையாது!! உணவுவிடுதிக்குள்ளும், தண்ணீர். கடைத்தெருவோ புயல் புகுந்த வயல்போலக் கிடந்தது. இந்த நெருக்கடியான நேரத்திலும் மாநாட்டுப் பந்தலில் நான் கண்ட காட்சி என்மனத்தைப் புல்லரிக்கச்செய்தது. இவ்வளவு மழையையும், காற்றையும் கண்டு கலங்கி ஓடத்தானே முயல்வர் எவரும்? ஆனால் மாநாட்டுக்கு வந்திருந்த மக்களில் பெரும்பாலோர், மழையின் கொடுமையையும் நனைந்துபோன ஆடைகள் படுவதால் ஏற்படும குளிரின் வாடையையும் எப்படிப் போக்கிக்கொண்டனர் தெரியுமா? மழை வலுக்க வலுக்க இருந்த இடத்திலிருந்தபடியே 'திராவிட நாடு திராவிடருக்கே !' என்று முழக்கமிட்ட வண்ணம் கிடந்தனர். மழையின் சப்தம் வலுக்கும்! இவர்கள் முழக்கமும் கேட்கும்!! முழக்கமும் சப்தமும் கலந்துவந்த பேரொலி. மயிர்க்கூச்செரியும் விதத்திலிருந்தது. "ஆபத்து எதாயினும் சரி! அஞ்சமாட்டோம்!!", என்று வீரத்துடன் அவர்கள் நின்றூர்கள். அவர்களிலே பலருக்கு உடுக்கவும் ஆடையில்லை! ஈரத்தைப் பிழிந்து கட்டிக்கொண்டு சேற்றிலும் சகதியிலும் இரவைக் கழித்தனர் !! அவர்தம் உள்ள உரத்தை இயற்கையால்கூட வெற்றிபெற முடியவில்லை! இரவு அவ்வளவு கடுமையாக அடித்ததல்லவா, மழை-காலையில் பார்த்தால் அறிகுறி எதுவுமே இல்லை. இரவுகூட மணி 10-க்கெல்லாம் மழை நின்றதும் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினரின், தோழர். கருணாநிதி தீட்டிய "மணி மகுடம்" எனும் நாடகம் நடைபெறத்தவறவில்லை.

மூன்றும் நாள், நாவலர் நெடுஞ்செழியனைத் தலைமைப் பதவி வகிக்குமாறு வழிமொழிந்து பேசினார். கடைசியில் அண்ணா, "தம்பி! வா. தலைமை, தாங்க வா. உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம், வா!" என்று அன்பழைப்புவிடுத்தார். அவரது வார்த்தைகளில், கடைசி வாக்கியம், யாவரையும் மனமுருக்கச் செய்தது. "உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம். வா!"—எவ்வளவு பொருள் பொதிந்த சொல்! ஜனநாயகத்தின் பொலிவு மிக்க சொல்லன்றோ அது! அந்த வார்த்தையின் மூலம், அவர், தன்னை மட்டுமல்ல, தான் உருவாக்கிய இயக்கத்தின் பாதை எப்படி அமைக்கப்படுகிறது என்பதனையுமன்றோ தெளிவுபடுத்திவிட்டார்.

தலைமையுரையாற்ற நாவலர் எழவும், ஒவ்வொரு மாவட்டத்தினரும், தனிப்பட்டவர்களும் ஏராளமான மலர் மாலைகளையும் கைத்தறியாடைகளையும் அணிவித்தனர். பிறகு, தி. மு. க.வின் குரல், ஒலித்தது.

இடைவேளைக்குப் பிறகு தோழர்கள் சொற்பொழிவாற்றினர். ஒவ்வொரு உரையும், சிந்தைகளிப்பூறும் வகையில் அமைந்திருந்தது! இரவு, புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனின் "அட்வகேட் அமரன்" எனும் நாடகம், நடைபெற்றது.

மாநாட்டின் கடைசி நாளான அன்று, ஞாயிற்றுக் கிழமையாதலால், எங்கு நோக்கினும் ஒரே மக்கள் வெள்ளம்தான்! எத்திசையை நோக்கினும் நம்மவர்கள்தான்! மாநாட்டுக்கென நகரின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான பஸ்கள் 'வள்ளுவ நகருக்கு' விடப்பட்டிருந்தும், போக்குவரத்தைச் சமாளிக்க முடியாமல் மேலும் மேலும் புது வண்டிகள் தேவைப்பட்டவண்ணமேயிருந்தன. குதிரை வண்டிகள், மாட்டு வண்டிகள் தொடர்ச்சியாக வந்துகொண்டிருந்த காட்சி கண்ணைக் கவர்ந்தது! மாநாடு துவங்கியதும் தோழர்கள் சொற்பொழிவாற்றினர். இடைவேளைக்குப்பின், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

இந்நிலையில், காலைமுதல் மாநாட்டுக் கொட்டகையில் எடுக்கப்பட்ட பொதுத்தேர்தல் வாக்கெடுப்பின் முடிவுகளை தோழர் சம்பத் தலைமையில் ஒரு குழுவினர் கூடி எண்ணியறிந்துவந்து எடுத்துரைத்தார்கள். அதனைப்பொதுச் செயலாளர் அறிவித்தபோது, மக்களின் கைதட்டல் அடங்க நீண்ட நேரம் பிடித்தது! மக்களின் தீர்ப்பையொட்டி பொதுத் தேர்தல் சம்பந்தமான விபரங்களை அறிந்து ஆய்ந்துரைக்க அண்ணா, சம்பத், ஆசைத்தம்பி கொண்ட மூவர் குழு ஒன்றை நியமிப்பதாகப் பொதுச்செயலாளர் அறிவித்தார். அண்ணா அவர்களின் சொற்பொழிவுக்குப் பிறகு, இரவு எம். ஜி. ஆரின் 'சுமை தாங்கி' எனும் தோழர் பாண்டுரங்கன் தீட்டிய நாடகத்துடன் மாநாடு இனிது முடிந்தது.

★

# நெடுஞ்செழியன் அன்றும்! இன்றும்!

**தம்பி!**

நன்றி! உளங்கனிந்த நன்றி! அன்பு கலந்த நன்றி!

மகிழ்கிறேன், பெருமைப்படுகிறேன், பூரித்துப் போகிறேன். கவிதை தீட்டக்கூடக் கருத்து துள்ளுகிறது—என் செய்வேன்! என் சிந்தையெல்லாம், தோள்களெல்லாம் பூரிக்குது!!

வெற்றி! மகத்தான வெற்றி! மறக்கொணா வெற்றி! வரலாற்றுச் சுவடியில் இடம்பெறத் தக்க வண்ணம் நிரம்பிய வெற்றி!

உன் செயல்வண்ணம் கண்டேன்—எதிரே நின்று உருட்டி மிரட்டிய ஓராயிரம் இன்னலும் பிடரியில் கால்பட ஓட்டம் பெருநடையாய்ச் சென்றிடக் காண்கிறேன். உள்ளம் உவகைக் கடலாகிவிட்டது—ஒன்றின்மீ தொன்றாக, ஒன்றைத்துரத்திக்கொண்டு மற்றொன்று என்ற முறையில், நெஞ்சில் களிப்பு அலைகள்!!

அல்லும்பகலும் ஆயாசமும், அச்சமும் பிடித்தாட்டியநிலையில் இருந்தேன்-அண்ணா என்ற குரல் கேட்டுத் திரும்பினேன், என் அருமைத் தம்பி! உனனை நான் கண்டேன்—உன்கைவண்ணத்தை எழிலோவியமாக அமைத்த 'வள்ளுவர் நகர்' எடுத்துக் காட்டிற்று! உன் ஆர்வத்தை வானளாவப் பறந்த நம் கழகக்கொடி காட்டிற்று! எங்கும் உன் முழக்கம் கேட்டேன்—எதிலும் உன் திறமை கண்டேன்—புதியதோர் இன்பம் கண்டேன்—போற்றுகிறேன் உன்னை "புவியோரே! புவியோரே! காண்மின் இக்காட்சியை! கையில் ஊமையரோ! கருத்தழிந்த நிலையினரோ! செய்தொழில் மறந்தவரோ! மனித உருக்கொண்ட பதுமைகளோ! என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கிக் கிடந்தோம்-எள்ளிநகையாடியும், இழிமொழியால் தாக்கியும் ஏதறிவர் தீது பேசலன்றி, என்று இயம்பியும் எம்மைவாட்டிய வன்கணாளரைத் தாங்கிக் கிடக்கும் வையகமே! இதோ காண்பாய், செயல் வீரர்தரும் சித்திரத்தை, கொள்கைக் கோமான்கள் கட்டியுள்ள கோட்டையினைப் பாராய், அவர்தம் படைக்கலனாகத் திகழும் ஆர்வம் காண்பாய், அவர்தம் களிப்பொலி எனும் முரசம் கேட்பாய். அதோ, அதோ இங்கு, அங்கு, எங்கும் ஆயிரக்கணக்கில் பல்லாயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில்—நெடுஞ் சாலைகளெல்லாம் அணி அணியாக வந்த வண்ணமிருக்கும் இந்த வீரர் கூட்டத்தைப் பாராய். இங்கு ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியை, இன எழுச்சியை, விடுதலைப் பேரார்வத்தை எடுத்துக் கூறாய்"—என்றெல்லாம் குன்றேறிக் கூவத் தூண்டுகிறது.

திருச்சி மாநிலமாநாட்டில் வெற்றியை நிச்சயமாக எதிர்பார்த்தேன், ஆற்றல் மிக்கதோர் அணிவகுப்பு நம் தாயக விடுதலைக்காகத் தயாராகிவிட்டதை அறிந்தவன் என்பதால், நான் மாநில மாநாடு மகத்தானதோர் வெற்றியாகவே திகழும் என்பதிலே நம்பிக்கை வைத்திருந்தேன். ஆனால் தம்பி, என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டாய்—தேடித் தேடிப் பார்க்கிறேன் தெள்ளு தமிழில்—வெற்றி என்ற சொல் போதவில்லை, நாம் பெற்றதை விளக்க, புத்துயிர் பெற்றோம் என்பதா—புதியதோர் உலகு கண்டோம் என்பதா—பொற்காலத்துதயம் என்பதா—மாற்றார் பறமுதுகிடும் காட்சியினைக் கண்டோமென்பதா—நான் திணறுகிறேன் தம்பி, திட்டமான ஓர் சொல் கிட்டவில்லை.

வெற்றிகள் பல நாம் பெற்றிருக்கிறோம்.

தியாகத் தழும்பு எனும் விருதுகளைப் பெற்றிருக்கிறோம்.

நமது மாநாடுகளே, அறிவும் திருவும நடமிடும் மன்றங்களாகத்தான எப்போதும் காட்சி தருவன. ஆனால் திருச்சியில் நான கண்டது வெறும் வெற்றியா... அல்ல தம்பி, அல்ல! தமிழகம் தன்னிகரற்ற எழிலுடன் என்முன் நின்று, ஏடா, மூடா, நானிருக்க, நீ கவலை கொள்வது ஏதுக்கு. என



மடியில் தவழ்ந்திடும் பேறு உனக்கு இருக்கும்போது எத்தரும் பித்தரும் சத்த மிடுவதுபற்றி நீ ஏன் ஆயா சப்படுகிறாய் — இதோ நான் உன் முன் நிற்கிறேன்—என் எழில் விழி உமிழும் ஒளி, மாற்றாரின் வஞ்சனையைச் சுட்டுக் கருக்கிப் பிடிசாம்பலாக்கிவிடும்—அஞ்சற்க; ஆயிரம் எண்ணி அயர்ந்துபோய், செயலற்று இருந்துவிடாதே, விழி, எழு, இதோ நான் — உனக்காக நான் — என்றல்லவா முழக்கமிட்டது.

அந்திசாயும் வேளையிலே, ஆற்றோர வெண் மணலில், மென் காற்றுத் தாலாட்ட மெல்லியதோர் துயிலினில் வீழ்ந்துபட்ட வீரனிடம், துயில் நீக்கி எழுந்து வாராய், தோகையாள் அழைக்கின்றேன், ஆரத் தழுவிடாயோ, அன்பு முத்தம் தாராயோ, என்று வீணுகானத்துடன் பாடி, வண்ண மங்கை அருகே வந்தால்......வந்த வனிதையும் அந்த இளைஞன் உள்ளத்தில் நீண்ட பெரு நாட்களாக இடம் பெற்றிருந்த இளமங்கை தான் எனின்...எவ்வண்ணம் இருக்கும்...

தம்பி, திருச்சி உன்போன்ற இளைஞர்கட்கெல்லாம், இது போலல்லவா அமைந்தது.

தாயே, உன் நிலைகண்டு உளம் நொந்து, உனக்கு வந்துற்ற இடரும் இழிவும் உடைத்திடவும் துடைத்திடவும் ஆற்றலற்றுப் போனேனே என்று எண்ணி அயர்ந்திருந்த என்முன் நின்று, மகனே, சுரந்தெழும் உன் உள்ளன்பு, என் கண்ணீரைத் தடுத்து விட்டது — விலங்குகள் என்னை வருத்தமுறத்தான் செய்கின்றன எனினும், அதனை உடைத்திடும் ஆற்றல் பெற்ற மகன் நீ இருக்கிறாய் என்று அறிவதால் ஏற்படும் ஆனந்தம், என் அல்லலைக் கூட ஓரளவு குறைக்கிறது, மகனே! புலம்பியது போதும், புறப்படு. இதோ என் ஆசி உனக்குக் கவசமாகி நிற்கும், என் வரலாறு, உனக்கு வீரமூட்டும், புறப்படு, போரிடு, வெற்றிபெறு, —என்று தாயகம், உச்சிமோந்து கூறிடும் காட்சியாகக் காணப்பட்டது, திருச்சி மாநாடு — அகநானூற்றுப் பருவத்தைக் கடந்து விட்ட என்போன்றாருக்கு.

அனைவருக்கும், தம்பி, இது வெறும் வெற்றியாக மட்டும் தோன்றவில்லை—மாநாட்டிலே சம்பத் எடுத்துச் சொன்னபடி இலட்சியப் பாதையிலே நாம் எத்துணை நெடுந்தூரம் முன்னேறி இருக்கிறோம் என்பதனை மட்டுமல்ல, குறிக்கோள் வெற்றிபெற, இன்பத் திராவிடம் காண, நாம் மேலால் செல்லவேண்டிய பாதை அதிகமில்லை, என்பதனையும் திருச்சி மாநில மாநாடு காட்டிற்று. வெற்றி என்ற சொல் மட்டும், எங்ஙனம், இந்த நிலையினை விளக்கிடப் போதுமானதாகும்.

தம்பி, மோனநிலை என்று மதத் துறையினர் ஓர் கட்டத்தைக் கூறுவர். எண்ணவேண்டியதை எல்லாம் எண்ணியான பிறகு, சொல்ல வேண்டுவன வற்றைச் சொல்லியான பிறகு, மோனநிலை பிறக்கும் என்கிறார்கள். அப்போது, ஏதும் சொல்வதும் தேவைப்படுவதில்லையாம். மணம் வீசும் சந்தனம், மரமாக இருக்கும் போது, ஒலியும் கிளப்புகிறது—அரைபட்டு உடலில்போய்ச் சேர்ந்தானபிறகு—மணம் மட்டுந்தானே இருக்கிறது. ஒலியில்லை.

நான் 'மோனநிலை'யில் இருந்திட விரும்புகிறேன்.

மாநிலமாநாட்டின் வெற்றி, அதன் மகத்தான தன்மை, அதற்கான காரணங்கள், இவைகளைக் குறித்தெல்லாம், பேச, எழுதக் கூடத் தோன்றவில்லை. அந்தக் கட்டத்தைக் கடந்ததோர்நிலை—மோனநிலை என்கிறார்களே அது, இதுதான்போலும்.

"என்னடி பெண்ணே! புன்னகைக்குக் காரணம்? கிள்ளையும் இல்லை எதிரே; கழலாடவும் காணேம்! தானகப் புன்னகை புரிந்தபடி இருக்கிறாயே........"—தாய் கேட்கிறாள் "ஒன்றுமில்லை அம்மா!"-அவ்வளவுதான் மங்கையால் கூறமுடிகிறது.

"இதென்ன வேடிக்கை! பித்துப் பிடித்த பெண்ணே; காரணமற்றுக் களிப்பு வருமோ?" என்று தாய் கடாவுகிறாள். உண்மையை உணரமுடியாத தாயே, உன்னிடம் நான் எப்படிச்சொல்வேன், என் புன்னகையின் காரணத்தை! — என்று மகள் கூற வில்லை எண்ணிக்கொள்கிறாள்—புன்னகை மேலும் மலருகிறது!! அகநானூற்று நிலையுடன் தமிழக இல்லங்கள் இருந்த நாட்களில் காணக்கிடந்தகாட்சி இதுபோன்றது. மாநிலமாநாட்டு வெற்றி தரும் மகிழ்ச்சியை என்னாலும், இப்போது எடுத்து இயம்பவும் முடியவில்லை—சுவையுள்ள தேன், சுகமளிக்கும் தேன், — என்று கூறிக் கொண்டிருக்க முடிகிறதா, தேன் பருகும்போதும் சரி, தேன் மொழியாளிடம் சொல் விருந்து பெறும் போதும் — அதுபோல் தான், மாநிலமாநாடு அளித்த மகிழ்ச்சியைச் சுவைத்துக் கொண்டு மற்ற எல்லாவற்றையும் மறந்து கிடக்கிறேன்—மோனநிலை, —எனவே, அதிகமாகக்கூடப், பேச விருப்பம் எழவில்லை.

மாநாடு எப்படி?

வெற்றி.

மக்கள் திரளாக வந்தனரோ?

வெள்ளம்போல்.

என்னென்ன சிறப்புகள் மாநாட்டிலே, சொல்லு கேட்போம்.

சிறப்புகளா...? மாநாட்டுச் சிறப்புகளா...!—என்று வாய்விட்டுக் கூறுகிறேன். மேலால் பேச விருப்பம் எழவில்லை, என் உள்ளத்தை விட்டு நீங்காத அந்த எழிலைக் காண்கிறேன், இன்புறுகிறேன் — எடுத்தியம்பும் நிலையையும் இழந்து கிடக்கிறேன்.

இதோ நான், இதனை எழுதிக் கொண்டிருக்கும் நேரத்தில், நானிருக்கும் இடத்திலிருந்து ஆறேழு கல் தொலைவில் வினேபா இருக்கிறார்.

அவருடைய வருகைக்காக 'சர்வோதயநகரம்'காஞ்சியின் மற்றோர் கோடியில் இருக்கிறது. இடையில் மூவாயிரம் போலீஸ் வீரர்களும், சில நூறு அதிகாரிகளும், பல கோடி ரூபாய்களின் சொந்தக்காரரும், உள்ளனர். சர்வோதய நகரின் பந்தல் அமைப்புக்கும் பாதை அமைப்புக்கும், உண்டி உறைவிடம் அமைப்பதற்கும் ஊராள்வோர், நிபுணர்களைக் கொண்டு திட்டம் தீட்டி, பயிற்சி பெற்றோரைக்கொண்டு உருவாக்கி வைத்துள்ளனர்.

நேற்றைவிட இன்று வண்டிகள் அதிகம்—நாளைக்கு மேலும் அதிகமாகும் — பாதை நடுவில் செல்லாதீர்கள்—ஓரமாகச் செல்லுங்கள்—என்று அறிவுரை புகன்றபடி போலீஸ் வான் செல்லுகிறது. காஞ்சி நகரில், பெரியதோர் நிகழ்ச்சியாக இஃது உருவாக்கப் பட்டு வருகிறது. வினேபா வருகிறார் என்றாலே, போதும், விசேஷமான மாநாடாக்கிவிடலாம். இங்கோ வினேபா மட்டுமல்ல, பாபுராஜேந்திரர் வருகிறார்,—ஜெயப்பிரகாஷ்

நாராயணன் வருகிறார்,—கவர்னர் பிரகாசா வருகிறார்,—முதலமைச்சர் காமராஜர் வருகிறார், — வேறு மாநிலங்களின் காமராஜர்கள் சிலர் வருகின்றனர் — ஆசிரியப் பெருங்குழு வருகிறது,—கல்வித்துறை நிபுணர்கள் வருகிறார்கள்—கலாச்சாரக் கோஷ்டிகள் வருகின்றன—கனதனவான்கள் வருகின்றனர்—வந்துகொண்டு இருக்கின்றனர் — இவற்றை எல்லாம்விட 40 இலட்சம் ஏகருக்குமேல் 'தான நிலம்' இருக்கிறது — பங்கு போட்டிடும் திட்டம் தயாரிக்கப் போகிறார்கள்.

வினோபாவை அடிக்கடிக் காண முடியாது.

ஜெயப்பிரகாசரும் வந்த வண்ணம் இருப்பவரல்ல.

எனவே, காணக் கிடைக்காத காட்சியைக் காண, பெருந்திரள் குவியலாம் காஞ்சியில்.

இப்போதைக்குப் பெரும் போலீஸ் படை குவிந்துவிட்டிருக்கிறது.

சர்க்காருடைய நிர்வாக யந்திரம், மும்முரமாகவும் திறம்படவும் ஒரு புறம் பணியாற்றுகிறது; 'சாது சன்யாசிகள்' வரிசையில் சேர்ந்து சன்மார்க்கம் போதிக்கும் வினோபாவின் செல்வாக்கு மற்றோர்புறம் பணியாற்றுகிறது. இதனால் இங்கு எழிலும் ஏற்றமும், பெருங்கூட்டமும் பிரமுகர் நடமாட்டமும் மிகுதியும் இருந்திடக் காரணமிருக்கிறது.

இவ்வளவுக்கும் பிறகு, நடைபெற இருக்கும் வரதர் தேர் திருவிழாவின் துணையையும் நாடுகின்றனர்.

தம்பி! வரண்ட தலையினர் கூடினோம் திருச்சியில். வாழ்ந்துகெட்ட இனத்தினர் கூடினோம். வீழ்ச்சியுற்ற நிலையினின்றும் மீட்சி பெற, எழுச்சி பெற கூடினோம்—எண்ணி எழுந்து போலீஸ் உண்டா? ஏற்பாடுகளைக் கவனிக்க வசதிகள் உண்டா? பிரமுகர்களின் கடைக்கண் பார்வை உண்டா? இல்லை, இல்லை! நீ! உன் உள்ளத்தில் உள்ள உவகை! திருச்சியின் எழிலுக்கு இவைதான் இருந்தன. ஆனால் இவை எவ்வளவு மகத்தானவை என்பதை நான்கு நாட்கள் கண்டேன் — நான் மேற்கொண்டுள்ள பணியின் மேன்மையிலே எனக்கு எப்போதும் உள்ள நம்பிக்கை, ஆயிர மடங்கு மேலோங்கி வளர்ந்தது.

ஒரு இலட்சம் என்று முதல்நாள் கூறினர் — நாலாம் நாள், மூன்று இலட்சத்துக்குக் குறையாது என்றனர்—நமது தோழர்கள் அல்ல—ஊரார்.

யாரைக் காணக் கூடினர்? காண்பது பெரும்பேறு என்று கருதத்தக்க நிலை பெற்ற ஞானவான்களையா? மனமருளை ஓட்டி, அஞ்ஞானத்தை விரட்டிடும் ஆற்றல் பெற்ற அருளாளர்களையா? திடுக்கிடவைக்கும் திட்டம் தந்தோர், உலகு கண்டு பதறத்தக்க போர்வகை கண்டோர் ஆகியோர்களையா? கவர்னரையா? முதலமைச்சர்களையா? மூதறிஞர்களையா? இல்லை தம்பி, இல்லை. சாமான்யர்களைக் காணக் கூடினர்—சதாசர்வ காலமும் யாரை, சந்தைச் சதுக்கத்திலும், அங்காடிப் பக்கமும், ஊருணித் திடலிலும் காணுகின்றனரோ, அவர்களையே காணத்தான்.

நாவலர் நெடுஞ்செழியன் என்பவர் யார்? எப்படி இருப்பார்? எங்கிருந்து வருகிறார்?—என்று ஆவலுடன் கேட்டு, ஆர்வம் கொந்தளிக்கும் நிலை பெற்று மக்கள் குவிந்தனர் என்று கொள்ளமுடியும்! அவரைத் தமிழகம் அறியும்; மிக நன்றாக அறியும். மாநாட்டுக்கு முன்பு, மூன்று திங்களுக்கு ஓர் முறையேனும் திருச்சி அவர் உரை கேட்டிருக்கும். மதுரையில் அவர் முழக்கம் பழக்கமானதாகிவிட்டது. பட்டிதொட்டிகளிலும் அவர் அடிக்கடி நடமாடி வருபவர்.

மற்றையோர் அதேபோல, எப்போதும் மக்கள் மத்தியிலே உலவியபடி இருப்பவர்கள்.

காணக் கிடைக்காத தங்கங்கள் அல்ல—சாமான்யர்கள்.

அவர்கள்தான் மாநாட்டில் — மூன்று இலட்சம் மக்கள் அங்கு கூடுகின்றனர்.

பொருள் விளங்குகிறதா தம்பி! பொருள் என்ன என்பதை மாற்றார் உணருகிறார்களா என்று கேட்டுப் பார்.

சாமான்யர்கள் அழைக்கிறார்கள் —ஜனசமுத்திரம் கூடுகிறது.

அவர்களுக்கு முன்னும் பின்னும் அதிகாரிகள் படைவரிசை இல்லை.

அவர்கள்மீது ஏதும் புத்தம் புது மெருகு பூசப்படவில்லை.

அவர்கள் நேற்றுவந்தார்கள்—பேசினார்கள்—நாளை வருவார்கள் பேசுவார்கள்—நாடு அறியும்—எனினும் அவர்கள் மட்டுந்தான் வருகிறார்கள் என்று தெரிந்தும், 3 இலட்சம் மக்கள் கூடினர்—நாலுநாட்கள் ஆர்வத்தைச் சொரிந்தனர்—காலையில் 9மணிக்கு நிகழ்ச்சி தொடங்கி விடியும் வரையில் நடைபெறும்—அவ்வளவிலும் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். இந்த மகத்தான நிகழ்ச்சியின் உட்பொருளை உணர்வோரே, காலத்தின் கருத்தை அறியமுடியும். பிறர் தம்மைத்தாமே ஏமாற்றிக்கொண்டோம் என்று பின்னையோர்நாள் கைபிசைந்துகூறிக்கொள்ளவேண்டி நேரிடும்.

மாநிலமாநாடு, மாபெரும் தலைவர்களைத் தரிசிக்க ஏற்பட்ட ஏற்பாடல்ல—நாட்டின் விடுதலை வேட்கையை, விழிப்புணர்ச்சியை எடுத்துக்காட்டும் ஏற்பாடு.

இதனை உணர்ந்ததால்தான், பலநூறுதடவை, யாரார் உரைகளைக் கேட்டிருக்கின்றனரோ, அவர்களே தான் மாநில மாநாட்டிலே பேசுவர் என்பதை அறிந்திருந்தும், நாம் அறிந்தவர்கள் தானே என்று அலட்சியமாக இல்லை. நாம் பலதடவை கேட்ட பேச்சுதானே என்று அக்கறையற்றுக்கிடவில்லை, நமது மாநாடு கூடுகிறது, நாம் அதிலே கலந்துகொண்டாக வேண்டும் என்றகடமை உணர்ச்சியுடன் மூன்று இலட்சம் மக்கள் கூடினர்.

பிற கட்சிகளில் இருப்பினும், சிந்தனைத்திறனை இழந்திடாமலிருக்கும் பெரியவர்களை, இதுபற்றி எண்ணிப்பார்த்து, உட்பொருளை உணர்ந்து, உலகுக்குஉரைத்திடச் சொல்கிறாயா, தம்பி?முயன்றுபார்.

என்ன இதன் உட்பொருள், தம்பி! சாமான்யர்களின் மாநாடு, ஏன், இத்துணைச் சிறப்புடன் விளங்கிற்று? காரணம் உண்டு, கருத்துள்ளோர் அறிவர் —அறிந்திடும் மாற்றார் கலங்குவர்.


கைகொட்டிச் சிரித்தனர் தலைக்கனம் கொண்டவர்கள்.

கரியும் பரியும் மந்தை மந்தையாக உள்ளன, தேர்ப் படையும் காலாட் படையும் பெரிதும் உடையேம், எமது வீரத்தின் எதிர் நிற்பார் எவர் உளர் என்று இறுமாந்து பேசினர்.

அவன் இளையன், எது செய வல்லான்—என்று உளையக் கூறினர்—இளைஞனாக இருந்த தமிழ்க் காவலனை—பேரரசர்கள்.

இளைஞன்தான்—எனினும் ஏச்சும் பேச்சும் கேட்டாக வேண்டுங் கொல்!

(14-ம் பக்கம் பார்க்க)




Maximum light given.

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 14
இதழ் 46, 47
27–5–56

# தியாகப் பரம்பரையினர் நாம்!

கட்கமேந்திக் களத்திலே குதித்த வீரன், கரி பாய்கிறதே, பரி பறந்து வருகிறதேஎன்று எங்ஙனம் கலங்கமாட்டானோ அதுபோலவே காரியசித்தியே வாழ்க்கையின் இலட்சியம் என்று கருதிவிட்டவன், மாடுமனைபோனாலும், மக்கள், சுற்றம் இழந்தாலும், பெறுதற்கரிய உயிரையே குடித்தேகும் கொடுமைகள் வரினும், தேள் கிணற்றிலே தள்ளப்படினும், தீக் குண்டத்தில் உருட்டப்படினும், அஞ்சேன்! அயரேன்!! என்று ஆவேசம் கொண்டு விடுகிறான். ஓட்டுவோம் உன்னை! வேட்டுவைப்போம் உனக்கு! விபரீத அம்புகள் கிளம்பிவருவதைப் பார்! அதோ, கழுமரம் வாய்பிளந்து கிடக்கிறது, உன்னை வரவேற்க! தூக்குமேடை! துடியிடையாள் விதவையாவாள்! இப்படி, எத்தனை மிரட்டல்கள் வரினும், ஒரு நற்காரியத்துக்காகத் தன்னைத் தத்தம்செய்துவிட்டவன், அவை அத்தனையையும் தூசுபோல மதிக்கும் சுபாவம்பெற்றுவிடுகிறான். இந்தச் சுபாவம் மட்டும் ஏற்படாமலிருக்குமாயின் கிரேக்கம் ஒரு சாக்ரடீசைப் பெற்றிருக்காது! ஜெர்மனி ஒரு மார்டின்லூதரைக் கண்டிருக்காது! பொகீமியா நாடு ஜான்ஹஸ் எனும் சீர்திருத்தச் செம்மலைப் பெற்றிருக்காது! ஸ்வானரோலா தூக்கிலே தொங்கியிருக்கமாட்டான்! லாட்டிமர், சாகத் தயாராகயிருக்கும் ரிட்லியை நோக்கி, "தம்பி! நாம் இன்று நம்மையே அர்ப்பணிக்கிறோம், மதச் சீர்திருத்தம்செய்யப் புகுந்தமைக்காக. தீயில் கட்டி உருட்டப்போகிறார்கள். நாம் ஏற்றும் இத்தீ, எளிதில் அணைந்து விடாது." என்று துணிவுடன் சொல்லிவிட்டு, தீயில்சாகமுன்வந்திருக்கமாட்டான! கொண்டகொள்கை மனிதகுலத்துக்கு நன்மைபயக்கச் செய்வது, அவைகளால், தான் பிறந்து வளர்ந்த சமுதாயம் பயன்பெற்றுய்யும், ஆகவே அவைகளுக்காக உயிர்போயினும்சரி என்று உள்ள உறுதி கொண்டு "செத்துக் காட்டிய" அச்செயல் வீரர்களை ஆண்டுகள் பல ஓடிப்போயினும், இன்னும் மறக்கவியலவில்லை உலகால்! உத்தமர் இயேசுவும், புதுக் கொள்கை புகுந்தமைக்காகக் கல்லடிக்கு ஆளான முகம்மதுவும், இன்றும் கவனத்தில் நிற்கக்காரணம், கொண்ட கொள்கைக்காகப்பட்ட கஷ்ட நஷ்டங்கள் தான்! கனகமயமான அரண்மனை, தங்கத்துடன் போட்டியிடும் தளிர்மேனியாள் சப்ரமஞ்சத்தில், வீணை மீட்டவும் மென்பாதம் வருடவும் தாதியர் கூட்டம், சங்கடமேதும் அற்றஇடம், அணுச்சஞ்சல மேதும் புகாத இடம்—அப்படிப்பட்ட அரண்மனையிலே பிறந்த சித்தார்த்தர், இன்று ஆண்டுகள் 2500 ஆகியும் உலகின் ஒவ்வொரு முனைகளிலும் ஒப்பற்றவர், உயர்ந்தவர், உத்தமர் என்று போற்றப்படக்காரணமென்ன? தன்னை அர்ப்பணித்தார், பொதுநலனுக்காக! அந்தஸ்து, சுகம் அனைத்தையும் தத்தம் செய்தார்!!

இவ்விதம் உயிர், பொருள், அனைத்தையும் பொது நலனுக்காக ஒப்படைத்த புனிதர்களின் நாமங்கள், கால வெள்ளம் ஓடினும், அழிவுப் புயல்கள் அடிப்பினும், என்றும் நீடித்து நிற்கும். அந்த உண்மையை அறிந்ததால்தான், நமது அறிவியக்கச் சீயங்கள்; கல்லடியாயினும், சொல்லடியாயினும், கத்திக் காட்டப்பட்டாலும், கயவனே கசடனே என்று ஏசப்பட்டாலும், கபர்தார் என்று மிரட்டும் குரல் எழுந்தாலும், "கட்டெறும்படா நீ! பார் உன் கதியை!" என்று அதட்டினாலும், அஞ்சாது அயராது பணியாற்றி வருகின்றனர்! இப்படி அதட்டிய குரல்கள் ஒடுங்கிப்போன வரலாறுகளையும், ஜாரையும், லூயியையும், சார்லசையும் சதிபல புரிந்து கதியற்றவர்களான காவலர்களையும், நாம் தெளிவாக அறிவோம். ஆதலின், இப்படிப்பட்ட உருட்டலும் மிரட்டலும், நமக்குச் செந்தேனாகவும் செவ்வாழையாகவுமே இருந்து வருகிறது, அன்று முதல்.

சீ, ஒரு நாத்தீகன்!—பேசக்கூடாததெல்லாம் பேசுகிறான் — எதையும் சந்தேகிக்கிறான் — ஏன்? எப்படி? என்று கேட்கிறான்—பிரிந்துபோக விரும்புகிறான்—திராவிட நாடு வேண்டுமாம்! —இதுபோல ஏதேதோ சொல்லியும், இயன்ற வரையில நம்மை அடக்க முயற்சித்தும், ஆதிக்கபுரியினருக்கு இயலாமற்போன காரணம், நாம் கொண்ட கொள்கைக்காகத் தியாகம் செய்யத் தயாராகயிருக்கிறோம் என்பது மட்டுமல்ல! கொள்கையில் உள்ள திண்மையும் வலிவுமே யாகும்!

புதுமை கண்ட புனிதர்கள், பொசுக்கப்பட்டிருக்கிறார்கள்—அதனால் என்றும் அவர்கள் கொள்கைகள் பொசுங்கியதில்லை! மக்களின் சேவைக்காக மாடமாளிகையினை விட்டுவந்தார், புத்தர்—அதனால் அவரது கொள்கைகள் குப்பைமேட்டுக்குப் போய்விடவில்லை! அவர்கள் ஒவ்வொருவரும் காட்டிய தியாகம், கொள்கைக்கு உரத்தையும் வலிவையுமே உண்டாக்கிக் கொடுத்தது.

நெடுஞ்செழியன், யார்? கல்லூரிப் படிப்பையும் கணக்கேடுகளையும் வைத்துக்கொணடு காலம் தள்ளிவிட முடியாதா! இவரைப்போல, ஊருக்கு ஊர், எண்ணற்ற வாலிபர்கள், ஊனையும் மறந்து உற்ற மனையையும் துறந்து, ஊருக்கு உழைப்பதே பெரியதொரு பாக்கியம் என்று பணியாற்றிடக் காரணம் என்ன? இவர்களெல்லாம் எதற்காக, இப்படிமுன்வரவேண்டும்? கனிமரக்காவும், பனிமரச்சோலையும், பறக்கும்சிட்டும், தாவும் மானும்,

தத்துக் கிளியும், கொத்துத் திராட்சையும், கதலியும் மாவும், கழனியும் அருவியும் நிரம்பிக்கிடக்கும் உலகில் அவரவர்களும் அவரவர்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு போகாமல் ஏனிந்த வேட்டடிபடும் வேலைக்கு வர வேண்டும்? கொள்கை! கொள்கை!! என்று முழக்கி, துப்பாக்கிக்கோ, ஈரல்குலை நோய்க்கோ தம்மை அர்ப்பணிக்க வேண்டும்?—என்ன அவசியம் அதற்கு! என்று எண்ணிப் பார்த்திடின், உலகைத் திருத்திய உத்தமர்களின் நினைவும், ஒவ்வொரு நாடுகளை வாழ்விக்க உயிரைத்தத்தம் செய்த மாவீரர்களின் பட்டியலும் கவனத்துக்கு வரும்.

அந்த வரிசையிலே நம்மவரும் இருக்கிறார்கள், இன்று. உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை! தீயில் தள்ளினாலும்; தொழுவத்தில் மாட்டினாலும், சுட்டுப்போடுவேன் என்றாலும், நஞ்சளிப்பேன் என்று சொன்னாலும், நயவஞ்சகத்தை ஏவினாலும், நாயே பேயே என்றாலும், அத்தனையையும் சகித்துக்கொண்டு பொது நலத்துக்காகத் தங்களை ஒப்படைத்த ஒப்பற்ற சிந்தனையாளர்களின் பட்டியலிலே; ரூசோ, மாஜினி, கரிபால்டி, மார்க்ஸ் போன்ற எண்ணற்ற விடுதலை வீரர்களின் பாதையிலே, நம்மவர்களும் இருக்கிறார்கள்.

அறிவுப் பரம்பரை, மிகப் பெரியது! அந்த பெரிய குடும்பத்தின், இந்த நூற்றாண்டு வாரிசுகளாயிருப்போர் பலர்—பல இடங்களில் உளர்—அவர்களில் தி. மு. க.வினராகிய நாமும் இருக்கிறோம்!!

மதாதீக்கமா?—விடோம்! பணதிக்கமா?—அடங்கிடும், எண்ணமில்லை! அடிமை வாழ்வா? — ஒருநாளும் சகியோம்! என்று, அனுதினமும், உணர்த்தி வருகிறோம்.

மக்கள் மனதை எரிமலையாக்கி, உடனே பனிக்கட்டி ஆகும்படி பாதையை வளைவு நெளிவுகளுக்காளாக்கிக்கொள்ளும் சூதுமதி நமக்குத் தெரியாது! அறிவுப்பரம்பரையின் வரலாறுகளைப் படிக்கிறோம்-அவர்களடைந்த கஷ்ட நஷ்டங்கள் நமது இதயத்தில் இன்னும் தியாக குணத்தை வளர்க்கிறது-அவர்களது திருநாமத்தை உச்சரித்துக்கொண்டு தீமைகளை அகற்றப் பாடுபடுகிறோம்!

இப்படி நாம் பாடுபடுகிறோம் என்பதை, ஏற்கமறுத்தோர், இருந்தனர் -ஏலே! என்னதிமிரடா!! என்று கொக்கரித்தோர் பலர்— ஊர்க்குருவி பருந்தாகுமோ? இந்தப்பொடியர்கள் விடுதலைவீரர்களாகமுடியுமோ? என்றோர் உண்டு. அவர்களனைவரும் முகத்தை மூடிக்கொள்ளவும், அடாபிடிப்பேச்சால் அழித்திடக் கனவு கண்டோர் ஓடிஒளியுவுமான அளவுக்கு நாம் வளர்ந்துவிட்டோம். மக்கள் மன்றம், நமக்கு ஆதரவளித்து வருகிறது.

இதனைத்தான் திருச்சி மாநாடு விளக்கியிருக்கிறது, உலகுக்கு.

மாநாட்டின் எழிலும், சிறப்பும், பொலிவும், வலிவும் புகட்டும் பரடம் இதுதான்!!

நாம், ஏனோதானோக்கள் அல்ல— தியாகப் பரம்பரை! செப்பி வரும் கொள்கைகளும், தொட்டால் சில் விட்டுவிடக்கூடியவை அல்ல: மக்கள் நலனையே முக்கியம் எனக்கொண்டவை. அவைகளைப் பரப்புவதற்காகப் பாடுபடும் நமது மறவரோ, புத்தரைப்போல் சுகங்களைத் துச்சமென மதிப்பவர்கள்! சாக்ரடீசைப் போல நஞ்சுகொடுக்கினும் அருந்திமடியும் துணிவுகொண்டவர்கள்! தீ! வேட்டு முழக்கம்!—எதற்கும், தம்மை அர்ப்பணித்தவர்கள்! அடக்குமுறைக் கஞ்சாத மாஜினிகள், மார்க்ஸுக்கள்!

உலகைத் திருத்திய உத்தமர்கள் எந்தெந்தக் கொடுமைகளைத் தாங்கினரோ, அத்துணைக்கொடுமைகளையும் சேர்த்து அளித்திடினும் தாங்கிக் கொள்ளும் திடமனது — நிச்சயம், நம்மவர்களுக்குண்டு. அதனால்தான், அறிவுப் பரம்பரையில் நாமும் அங்கமாகிவிட்டோம் என்று சொல்கிறோம்.

இந்தத்தியாக சுபாவமும், சுயநலமற்ற பண்புமே, இன்றையதினம் நமக்கிருக்கும்சொத்து! இவைகளைக் கண்டுணர்ந்ததால்தான், ஏழைகளாயினும் நம்மால் இவ்வளவு பெரியஇயக்கத்தைக் கட்டிக்காக்க முடிகிறது.

அரசு, அதட்டுகிறது — அதனை, துச்சமெனக் கருதச் செய்வது, இந்தத் துணிவுதான்.

ஆதிக்கக்காரர்கள், சாகடிக்க, சதுர்வித உபாயங்களில் முயன்றாலும், 'தூர நில்பகையே! துள்ளி வருகுது வேல்', என்று சொல்லும்படி நம்மை ஊக்குவிப்பது' கொள்கையின்மீது நமக்கு இருக்கும் நம்பிக்கைதான்.

இந்த நம்பிக்கையையும், அதனால் நாம் தாங்கிடும் சங்கடங்களையும் கண்டதால்தான் மக்கள் மன்றம் வாழ்த்துகிறது. தி. மு. க. தினம் தினம் வளர்ச்சி பெற்று வருகிறது.

இந்த வளர்ச்சி போதுமா?— எனின் ஒருபோதும் போதாது என்போம்!

தனிநாடு அமைக்க விரும்பும் நாம், இன்னும் தெளிவுபடுத்த வேண்டிய நெஞ்சங்கள் இலட்சக்கணக்கிலுள்ளன — செல்லவேண்டிய பட்டிதொட்டிகள் நூற்றுக் கணக்கிலுள்ளன. சீர்திருத்த வாதிகள் மட்டுமல்ல, நாம்; புதியதோர் தாயகம் பூக்கச் செய்ய வேண்டியவர்கள்! இந்தப் பொறுப்பு சாதாரணமானதா? அல்ல! அல்ல!

ஆகவே, மாநாட்டின் வெற்றிக் களிப்பில் மகிழ்ந்துகிடக்கும் நாம், நமது எதிர்காலத்தைப் பற்றியும் எண்ணிடல் வேண்டும். மகத்தான அறிவுப் பரம்பரையின் தூதர்கள் நாம்! அந்த அறிவுப் பரம்பரை, தன்னுடைய இலட்சியங்களைச் சாதிக்க ஏற்றுக்கொண்ட தியாகங்களையும் அறிவோம்!!

*

"நெடுநாள் நீ பஞ்சணையில் புரண்டாய்!
இப்போது கட்டாந்தரையில் படுத்துப் பார்!
கொதிக்கும் மணலில் உருளவும்
குளிர்ந்த நீரில் மூழ்கவும் கற்றுக்கொள்.
எத்தனை நாள் புல்புலைப்போல் கூவி
அலைவாய்?
எத்தனை நாள் குளிர்ச்சோலையில் வாழ்வாய்?
மலையின் உச்சியில் ஒரு கூடு கட்டு;
வாழ்க்கைப் போராட்டத்துக்கு
உன்னைப் பழக்கு!"

*

சுதந்தரக்கவி, இக்பாலின் இந்த வரிகளை நினைவூட்டி இலட்சியமற்று வாழும் எண்ணற்ற சகோதரர்களையும் தியாகப்பரம்பரையின் பக்கம் இழுத்து வரும் பணியினை, இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும்.

தியாகமும், உழைப்பும் என்றும் வீண் போகாது!

பெரிய குடும்பம் நம்முடையது!!

அதன், அண்ணன் தம்பிகளை ஒன்றுபடுத்துவோம்.

ஊர்தோறும், முன்னை விட அதிகமாகக் கழகங்களை நிறுவியும், பிரச்சாரங்களை நடத்தியும் பாடுபடுவோம்.

உண்மை என்றும் வெல்லும்.

உழைப்பு என்றும் வெற்றிதரும்.

தியாகச் செந்நீரில் நிச்சயம் புதிய தாயகம் பூக்காமற்போகாது.

★

## வாழ்த்துகிறோம்

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனின் அண்ணன் தோழர் எம். ஜி. சக்கரபாணி அவர்களின் மகனார் சத்யபாமாவுக்கும் செல்வன் ஏ. இராசனுக்கும் 23-5-56 மாலை 4 மணிக்கு சென்னை இராயப்பேட்டையில் சீர்திருத்தத் திருமணம் அண்ணா தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. புதுமை மணத்தினைப் பாராட்டியும் மணமக்களை வாழ்த்தியும் கலைவாணர் என். எஸ். கே., க. அன்பழகன், மு. கருணாநிதி, கே. மதியழகன், என். வி. நடராசன், தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் சுந்தரம் முதலிய பலர் பேசினர். திரைப்பட அதிபர்களும், எல்லா நடிக நட்சத்திரங்களும், நமது தோழர்களும் கலந்துகொண்டார்கள். தோழியர் வசந்தகுமாரியின் இன்னிசையும், திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம் அவர்களின் நாதசுர கானமும் நடைபெற்றது. மணமக்களுக்கு ஏராளமான பரிசுப் பொருள்கள் அளிக்கப்பட்டன. பெரியார் உள்பட பல்வேறு பெரியவர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன. அனைவருக்கும் எம். ஜி. ஆர். நன்றி தெரிவித்துக்கொண்டார். ★

9-ம் பக்கத் தொடர்ச்சி

படையின் தொகை மிகுதியாக இல்லாதிருக்கலாம், ஆயின் அதனைக் காட்டி என் வீரத்தைப் பழிக்கப் போமோ.

பேரரசராயின் ஆகுக. அது பற்றி அவர் சிற்றரசர் தமை சீரழிவாகப் பேசுதல் முறையோ,— என்றெல்லாம் இளஞ்சிய மன்னனை அத்தமிழன் எண்ணினான்.

உள்ளம் வெதும்பிற்று, அது வீரத்தைக் கருக்கிவிடவில்லை — வீரம் கொழுந்துவிட்டெரிந்தது. வஞ்சினம் கூறினான்.

நாவடக்கமற்று எனை இழித்தோரை எதிர்த்து அறிவு புகட்டுவேன்.

களத்திலே அவருடன் போரிட்டு, அவர்தம் முரசு பறிப்பேன்.

அங்ஙனம் யான் செய்யாதொழியின், கொடுங்கோலன் என்ற வசையைத் தாங்கித் தாழ்வுறுவோனாகக் கடவேன். புலவர் பாடிடத் தகுதி பெருக நாட்டுக்குரியோன் என்ற இழிநிலை பெற்றவனாகக் கடவேன். இரப்போருக்கு ஈந்திடும் நிலையையும் இழந்தவன் என்ற ஏச்சுக்கும் பேச்சுக்கும் இலக்கானவன் ஆகக்கடவேனாக— என்றெல்லாம், வஞ்சினம் கூறினான்,

நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளையன் இவனென உளையக் கூறிப்
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப்பு அஞ்சாது உடல்சினஞ் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை

என்று.

இதுகளுமன்றோ ஓர் கட்சி நடாத்துகின்றன!

அன்னக்காவடிகளுக்கு அரசியலில் என்ன வேலை?

இந்து உண்டோ? மித்திரன் உண்டோ? பேழை உண்டோ? பெரும் பண்ணை உண்டோ? யாதுளதென கழகம் கண்டனர்— என்று சிறுசொற் சொல்லிய சிறுமதியாளர்கட்குப் பாடம் கற்பிக்க விரும்பினர் தம்பி, நமது கழகத் தோழர்கள் — அதுதான் திருச்சி மாநாடு.

எமது கழகம் பெற்றுள்ள ஏற்றம் எத்தகையது என்பதை மாற்றாரே, மதியற்றாரே, உணரும்விதத்தில், திருச்சியில் வெள்ளம்போல் தமிழர் கூட்டமொன்றை, வெற்றிகொள் வீரர் கூட்டமொன்றைத் திரட்டிக் காட்டிடுவோம், காணீர். அவ்வணம் செய்யாதுபோயின், எமக்கென ஓர் கொடி வேண்டோம், கழகம் வேண்டோம், குறுந்தடிகொண்டோர் காலடி வீழ்ந்தழிந்து போவோம் — என்று, தம்பி, நீயும் நானும் சேர்ந்து வஞ்சினம் கூறினோம்.

சினங்கெழு வேந்தர், சிறுசொற் கூறினர். வஞ்சினம் கூறினன் வேந்தன்; இளையன்!! யாது கூறினான்?

**அருஞ்சமம் சிதையத் தாக்கின் முரசமொடு**
**ஒருங்கு அகப்படே(ஏ)ன் ஆயிற்பொருந்திய**
**என்னிழல் வாழ்நர் சென்னிழல் காணாது**
**கொடியன்எம் இறையெனக் கண்ணீர்பரப்பி**
**குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக**
**ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவன் ஆக**
**உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்**
**புலவர் பாடாது வரைகவென் நிலவரை**
**புரப்போர் புன்கண் கூர**
**இரப்போர்க் கீயா இன்மை யானுறவே!**

[புறநானூறு 72]

இது அந்த வீர மன்னன் கூறிய வஞ்சினம்.

இழித்தும் பழித்தும் பேசிடும் அரசர்தம் முரசு பறிப்பேன் — அஃது நான் செய்யாதுபோயின், கொடுங்கோலன் என்று இகழட்டும் என்னை, புலவர் பெருமக்கள் என் நாட்டைச் சிறப்பித்துப் பாடாது இருக்கும் இழிவைப் பெறுவேனாக! — தம்பி, — தமிழ்ப் புலவரிடம் பொருள் கேட்டுப் பெற்று இன்புறுவாய்.

இளையோன், பெரும் படையற்றோன், என்று கூறி நகைத்தோர் செயல்கண்டு வஞ்சினம் கூறினன் ஓர் தமிழ்மன்னன்—வீரன்—இளைஞன்—என்பதையும்—அவன் வஞ்சினம் கூறியதற்கொப்ப செரு வென்றனன் போரில் வெற்றி பெற்றனன் என்பதை மட்டுமே, மாந்தரை நிறையுடையோர் ஆக்கத்தக்க தமிழ் இலக்கியத்தில் குறையறிவுமட்டுமே கொண்ட நான் உனக்கு எடுத்துக்காட்ட முடியும்—சுவையும் பயனும மிகுதியும் பெற தம்பி, நமது நாவலரை நாடு!

வஞ்சினம் கூறினன் முரசுபறிப்பேன் என்று.

பகை முடித்தனன் களத்தில் நின்று—அன்று—தமிழ்மன்னன்.

இன்று, நம்மை ஏதுமிலாதார், இல்லாமையால் இடர்ப்படுவோர், இலட்சியம் பேசுவர் எனினும் அதிலே வெற்றிகாணும் வசதிகளற்றோர், என்று இறுமாந்து கூறினர், பொருள் உடையாரும் புகழ் சுமப்போரும், பதவிபிடித்தோரும். நாமும் வஞ்சினம் கூறினோம். திருச்சிமாநாடு,நமதுவெற்றியாகத் திகழ்ந்தது. தம்பி! கேட்டால் உடல் புல்லரித்துப்போகும் இதோ நான் தரப்போகும் செய்தி கேட்டு.

வஞ்சினம் கூறிச் செருவென்ற அம்மன்னன் யார் அறிவாயோ.

## தலையாலங்கானத்துச்செரு வென்ற நெடுஞ்செழியன்

நமக்குக் கிடைத்திருப்பவரும் நெடுஞ்செழியன்.

வஞ்சினம் கூறினோம்; வெற்றி கண்டோம் திருச்சியில்.

ஆயின், களத்திலே நின்றுள்ள நாம் சிறுசொற்சொல்லிய சிறுமதியாளர் அகலக் கண் திறந்து ஆச்சரியப்படத்தக்க வெற்றியை, மகத்தான மாநாடு கூட்டிக்காட்டியதன் மூலம் பெற்றோம் — ஆனால் நாம் பெறவேண்டிய வெற்றி வேறொன்றுளது. அதனைப் பெறுதற்கே நமக்கோர் நெடுஞ்செழியன் கிடைத்துள்ளார். நாமும் நமது கழகத்தை அவரிடம் ஒப்படைத்திருக்கிறோம். தமிழ் மரபறிந்த அவர் தலைமையில் சிறுசொற் கூறிடும் சிறுமதியாளர்களின் கொட்டமடக்கி, மாங்குடி மருதன் போன்ற பெரும் புலவர்கள் பாடிப் போற்றிய இத் திருவிடத்தை வடவர்பிடியிலிருந்து விடுவித்து, வாகை சூடத்தான் போகிறோம். தம்பி, விழி திறந்திருக்கட்டும்— வாள் கூர்மையாக இருக்கட்டும்— தாயகத்தின் தளையினை உடைத்திடும் அறப்போருக்கு அஞ்சாநெஞ்சனும் நமது பொதுச்செயலாளரின் அழைப்பு கிடைத்ததும், நெடுநல் யானையும் தேரும் மாவும்கொண்டு இறுமாந்து கிடந்த மன்னர்களைச் செரு வென்றதுபோல, பண பலம், பதவி பலம், பத்திரிகை பலம் படைத்தோரை, நாம் நமது தூய உள்ளத்தில் துளிர்த்தெழும் அறப்போர்த் திறத்தால், வீழ்த்துவோம் —விடுதலை பெற்ற தாயகம் கண்டு வாழ்த்துவோம். திருச்சி மாநில மாநாடு, நமக்கு இந்த வீர உணர்ச்சியை அளித்திருக்கிறது. எல்லாம் உன் அறிவாற்றலின் விளைவு! உன் உழைப்பின் பலன்! உன் உள்ளத்தில் ஊற்றெடுத்து வரும் உணர்ச்சியின் காரணமாகக் கிடைத்தது. தம்பி! உன் ஆற்றல் வளரட்டும் — புகழ் ஓங்கட்டும் — வாழ்த்துகிறேன் உன்னை.

அன்பன்,

**அண்ணாதுரை.**

# நாவலர்-நம் காவலர்

[ ஒரு உரையாடல் ]

**பொன்னன்:-** வானம் கருத்து வருது அண்ணேன்; காத்தும் குளிருது......கருமேகம் திரளுது... ...மழை பெய்யும்போலத்தான் இருக்கு...

**வீரப்பன்:-** மின்னலும் கூடத்தான் காணுது......மழை 'ஜோ ஜோ'ன்னு பெய்யட்டும், நல்லது தானே......

**பொன்:-** அண்ணேன்! ஏது, இப்ப மழையின்பேரிலே உனக்கு இவ்வளவு கனிவு சுரக்குது........ அண்ணைக்கி எறிஞ்சி விழுந்தயே......!

**வீரப்;-** ஆமாண்டா பொன்னு! அண்ணைக்கி நம்ம மாநாட்டிலே எனக்கு இந்த மழையின்பேரிலே எரிச்சல்னு எரிச்சல், சொல்லி முடியாது போ. கொஞ்ச நேரத்திலே, நம்மை எல்லாம் வெகு பாடு படுத்திவிட்டுதெல்லோ! குழந்தை குட்டிகளோட குடும்பம் குடும்பமா இலட்சக் கணக்கிலே, மக்களெல்லாம் வந்திருக்காங்க, அந்தச் சமயமாபார்த்து மழை கொட்டினு, என்ன செய்யறது சொல்லு. எங்கெந்தக் கோடியிலே இருந்தெல்லாம் வந்திருக்காங்க, தொலை தூரத்திலே, மலை ஓரத்திலே இருக்கிற தோட்டக்காடு, மேட்டாங்காடுகளிலே இருந்தெல்லாம், கடன் பட்டாலும் பரவாயில்லே, கண்கொள்ளாக் காட்சியைக் காணவேணும், நம்ம 'கலி' தீர்க்கிற பேச்சுகளைக் கேட்கவேணும், என்கிற ஆவலோடு வந்திருக்கிறுங்க, அவங்க மனசை ஒரு குழப்பு குழப்பி விட்டுதே, மழை! சட சடன்னு மழைவிழ ஆரம்பிச்சதும், பொன்னேய்! நான் உள்ளபடி பயந்து தான் போனேன்,

**பொன்:-** ஆமாம் அண்ணேன்! வாய்க்கால் ஓடறது போலத்தான், மகாநாட்டு கொட்டகைக்குள்ளே தண்ணீர் புகுந்து விட்டது......

**வீர:-** மக்களெல்லாம் வெகு பாடு பாடு பட்டுப்போனுங்க......

**பொன்:-** ஆனு அண்ணேன்! மேடைமேலே இருந்த தலைவர்களெல்லாம், ஒரு நொடியிலே நிலைமையை அறிந்துகொண்டு, தகுந்த நடவடிக்கை எடுத்துக்கிட்டதையும், பெண்டு பிள்ளைகளை பாதுகாத்ததையும் நினைத்துப்பார்க்கும் போது, உண்மையிலேயே உடலுசிலிர்க்குது......

**வீரப்:-** பொன்னு! தலைவர்கள் செய்த உதவி கிடக்கட்டும்...... அது அவர்களோடகடமை...... ஆனு வந்திருந்த ஜனங்க காட்டின பொறுமையிருக்குதேஅது தான் அருமையாயிருந்தது. எவ்வளவு அமைதியா யிருந்தாங்க ........சாதாரணமான காலத்திலே இப்படி ஒரு சம்பவம் நடந்தா, குய்யோ முறையோன்னு கூவிகிட்டு, மூலைக்கு மூலை சிதறி ஓடி, ஒரே அல்லோல கல்லோலமாயிடுமே! மகா நாட்டிலே, எவ்வளவு தைரியமா இருந்தாங்க-எவ்வளவு அமைதி காட்டினுங்க......கட்டுப்பாடுன்னு இதைத்தானேசொல்லோணும்.......

**பொன்:-** அது உண்மைதான் அண்ணேன்! கோயில் திருவிழா ஒண்ணிலே நான் பார்த்தேன், மழை வந்தது, 'சாமியை'க் கீழே வைத்துவிட்டு, ஓடியே போயிட்டாங்க, மழைக்குப் பயந்துகிட்டு...பக்தருங்க...

**வீர:-** பக்தருங்களா...! இருக்கும் இருக்கும்......நாம, பக்தியாலா மாநாடு பார்க்கப் போறேும். நம்ம கஷ்டம்தீர வழி என்ன, நம்மோட தரித்திரம் தொலையணுமே, படாதபாடு இல்லே, செய்யாத வேலை இல்லே, ஒரு, துளியும் மனதுக்கு நிம்மதி இல்லையே, இந்தப் பாழான ஜென்மம் எப்பத்தான் முன்னேறி, நாலுபேருபோலே நாமும் படித்து பக்குவம் அடைந்து முன்னேற்றம் அடையறது...... ஒட்ட ஒட்ட, வரியைக் கறந்து எடுத்துக்கொள்ளுது இராஜாங்கம் நாமோ ஒட்டிப்போன வயறும் குழி விழுந்துபோன கன்னமும், இருண்டுபோன கண்ணேடவும் இருந்து வேதனைப்படுறேமே, நமக்குச் சுகம் எப்ப கிடைக்கும், எப்படிக்கிடைக்கும் என்கிறதைப்பத்தி எல்லாம், நம்மோட கட்சி என்னென்ன சொல்லுதுன்னு கேட்டுப் போகத்தானே-வந்தோம். ஆனை வாகனமும், அதிர்வேட்டும், வேதபாராயணமும் வெள்ளித் தேரும் பார்க்கவா போயிருந்தோம்...?

**பொன்:-** அண்ணேன்! முதலிலே நீ சொன்னபோது, நம்பவே இல்லே, மகாநாடு, இவ்வளவு 'ஜோரா' இருக்கும்னு. திருச்சிப் பட்டணத்திலே, திரும்பிப்பார்க்கிற இடமெல்லாம் நம்ம ஆளுங்க தான்! மகாத்மா வந்தபோது கூட இல்லே, நேருவந்தாலும் கூடாத அளவு இதுன்னு, திருச்சிப் பட்டணத்திலே கடைக்காரெல்லாம் பேசிப்பேசி ஆச்சரியப்பட்டுப்போனுங்க......

**வீர:-** இதுவும் கூடுர், இதுக்கு மேலேயும் கூடும் பொன்னு! மக்

களுக்கு இப்ப நம்ம கழகத்திடம் தானே; மதிப்பு மரியாதை, நம்பிக்கை எல்லாம். கொஞ்சமான பிரச்சாரமா நடக்குது, நாலாயிரம் ஆருயிரம் அடி உயரத்திலே இருக்கிற மலைமேலே உள்ள பட்டிகளிலே எல்லாம் நம்ம கழகக்கொடி பறக்குதே!!

பொன்:- ஆமா அண்ணேன்! நம்ம கழகத்தோட பேச்சுத்தான் மக்களுக்குப் புரியுது...

வீர:- அப்படிச் சொல்லாதடா தம்பி! மக்களோட கஷ்டம், நம்ம கழகத்துக்குத்தான் தெரியுது, அதனாலே, நம்ம கழகத்தாருதான், மக்களுக்குத் தேவையான புத்தி புகட்டவும், புதுமுறைகளை எடுத்துச் சொல்லவும், நல்வழி எதுன்னு காட்டவும், பாடுபட முடியுது......

பொன்:- ஆமாம், ஆனா, நம்ம கழகம் விஷயத்தை எடுத்துச் சொல்லி, நம்மை விழிப்பா இருக்கச் சொல்லத்தானே முடியுது. கஷ்டத்தைப் போக்க ஒரு பரிகாரம் செய்ய முடியலையே...?

வீர:- ஆமாம், பொன்னா! நம்ம கழகமா துரைத்தனம் நடத்துது? ஆளச் சொல்லி வேறே ஆளுகளை அனுப்பிவிட்டு, அவதிப்படறோம் — நம்ம கண்ணீரைத் துடைச்சி, கஷ்டத்தைப் போக்கிக்கொள்ள வழிகண்டு சொல்ல கழகம் பாடுபடுது; வேறே என்ன செய்யமுடியும், சொல்லு. பெட்டிச் சாவி வேறே ஆசாமிகளிடமல்ல இருக்குது......

பொன்:- ஆமாம், அதனாலேதான், நம்ம வாழ்வை நாசமாக்கி, நம்மோட கண்ணீரை பன்னீராக்கிக் குளித்துக் கூத்தடிக்கும் கும்பலுக்கு மறுபடியும் ஓட்டுப் போட்டு, நாடு கெட்டுப்போகக் கூடாதுன்னு, மகாநாட்டிலே சொன்னாங்க...

வீர:- முனியன் என்ன சொன்னான்? எப்பவும் ஏதாவது வம்பும் தும்பும் பேசுவானே? அவன் என்ன சொன்னான்?

பொன்:- அவனா மகாநாட்டிலே முதநாள் அலட்சியமாகத்தான் இருந்தான் ...... பிற்பாடு, நம்ம கழகத்தாரு பேசப்பேச ஆசாமி அப்படியே வாயைப் பிளந்துகொண்டு உட்கார்ந்து விட்டான் ......“ஆமாம், ஆமாம், ரொம்பச் சரி, அப்படிச் சொல்லு,...... அதுதான் உண்மை” இப்படி ஒரே சந்தோஷப் பேச்சுதான். யாரோ முனியனுக்குச் சொன்னாங்களாம், நம்மோட கழகத்திலே பேசறது, புரியாது, எதை எதையோ பேசுவாங்க, பாப்பானுகளைத் திட்டித் திட்டித் காலத்தை ஓட்டுவாங்கன்னு... ...முனியன் அதை நம்பிகிட்டு இருந்திருக்கிறான், மகாநாட்டிலே உட்கார்ந்து ஊர் விஷயம் உலக விவகாரம் இதைப்பத்தி எல்லாம், நம்ம கழகத்தாரு, விளக்கமாகப் பேசினதைக்கேட்டான். அருமை! அருமைன்னு ஒரே ஆனந்தக் கூச்சல் போடறான்......

வீர:- தொட்டதுக்கெல்லாம் சொட்டு, சொல்ற முனியனே திருந்திவிட்டான்னு சொன்னா, பிற்பாடு, மத்தவங்களைப் பத்திக் கேட்பானேன். நானு, நம்ம பூஜாரி இல்லே, சின்னையன், அவனைக் கவனிச்சிகிட்டே இருந்தேன், மகாநாட்டிலே, அடே அப்பா! சந்தோஷம் தாளமாட்டாமே ஆசாமி துள்ளித்துள்ளிக் குதிக்கிறான். வில்லுப் பாட்டு நடத்தினார் பாரு, என். எஸ். கிருஷ்ணன் அதிலே ஏன்? ஏன்? என்ற கேள்வி இப்ப கிளம்பி இருக்குதுன்னு பேசினாரே, அதைக் கேட்டு, சின்னையன் ரொம்பச் சந்தோஷப் பட்டான். நான்கூட குத்தலா சின்னையனைக்கேட்டேன், என்னா பூஜாரி! சாமி இல்லே, பூதம்இல்லேன்னு பேசுகிற கூட்டத்திலே கூடிகிட்டயேன்னு; போடாபோக்கிரி கேலியாச் செய்யறே? நான் சும்மா வயத்துப் பிழைப்புக்கு பூஜாரி வேஷம் போட்டவன் தானே! அதுவும் இனிமேல் படக்கிடையாது...... என் உடம்பிலேமட்டும் திராவிட இரத்தம் ஓடலியான்னு, வீராவேசமாப் பேசறான்......

பொன்:- ஆமாம் சந்தேகப்பட்டவங்க, நம்மோடு சச்சரவு செய்தவங்க, நம்மோடசகவாசம் கூடாதுன்னு, பேசினவனுங்க, எல்லாரும் நாலுநாள் மகாநாட்டிலே புது மனஷனாயிட்டானுங்க...... மகாநாடு, அந்த வகையிலே பார்க்கறபோது, பெரியவெற்றிதான்......

வீர:- சந்தேகமென்ன? எல்லா வகையிலும் வெற்றிதான் இதுவரையிலே, எந்த அரசியல்கட்சியும் செய்து காட்டாத, பிரம்மாண்டமான மகாநாடு......யாரு இல்லேன்னு சொல்லமுடியும். பேசினாங்களே, கேட்டயேல்லோ ஒருநாடு விடுதலை அடையுதுன்னா, இப்படிப்பட்ட குறிகள் தெரியும்! அலட்சியமா இருந்து வந்தவங்களுக்கெல்லாம், அக்கறை பிறக்கும். நமக்கென்ன என்கிற போக்கிலே இருந்தவங்களெல்லாம், இதுநம்மோட நாடு, நம்ம காரியம்னு வேலை செய்ய முன் வருவாங்க. ஒரு நாட்டுக்கு விடுதலை கிடைக்குதுன்னா, இதெல்லாம் நேரிடும்னு சொன்னாங்களே......

பொன்:- அன்னியனோட பிடியிலே இருந்து விடுப்பட்ட தேசத்தை பத்திஎல்லாம், என்னவிளக்கமா எடுத்துச் சொன்னாங்க. நம்ம மதியழகன்தானே பேசினது......

வீர:- ஆமாம், பொன்னாய்! பரவாயில்லையே, ரொம்ப உன்னிப்பாக் கவனிச்சிகிட்டு இருந்திருக்கறியே......

பொன்;- என்ன அண்ணே அப்படிச் சொல்லிவிட்டே! நான் என்ன மகாநாட்டு அலங்காரத்திலேயே சொக்கிப்போயி, பேசறது யாரு, என்ன விஷயமாப் பேசறாங்க என்பதைக் கூடக் கவனிக்காமலிருந்து விடுவேனுன்னு எண்ணிகிட்டையா! எத்தனை தேசங்களெல்லாம் விடுதலைபெற்று, இப்ப சொந்த ஆட்சி நடத்தி சுகப்படுது என்கிற விஷயத்தைக் கேட்டா தானே நமக்குத்தெம்பும் தைரியமும் பிறக்கும், நம்பிக்கை ஏற்படும், நாமும் இன்னும் முனைந்து வேலை செய்ய ஆர்வம் கிளம்பும்.

பேராசிரியர்:—க. அன்பழகன்
அளிக்கும்.

அரசியல் விளக்கந் தரும்
அரிய கருத்து நிறைந்த ஏடு!

**“உரிமை வாழ்வு”**

விலை ரூ. 1–8–0

கிடைக்குமிடம்:—

**பாரி நிலையம்,**

59, பிராட்வே, சென்னை-1.

வீர:- ஆமாம், அதுக்காகத்தான், விடுதலைக் கிளர்ச்சி, உரிமைக் கிளர்ச்சி, இப்படிப் பல விஷயமாக எடுத்துப் பேசினுங்க...

பொன்:- அண்ணேன்! எல்லோரும் பொதுப்படையா பேசிகிட்டு இருக்கிறதைவிட ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விஷயமா, அலசிக் காட்டிப் பேசற முறை இருக்குதே, அது எனக்கு ரொம்பப் பலனுள்ளதாகத் தெரியுது. நம்ம கருணாநிதி கதை கதையாச் சொன்னாரு கேட்டயேல்லோ, நம்மோட நாடு, அந்தக் காலத்திலே கொடிகட்டி வாழ்ந்ததை! நாகரீகமே, இங்கே இருந்துதான், உலகத்திலே பல நாடுகளுக்கும் சென்றதுன்னு, சொன்னபோது, நான் பெருமையாலே, கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தேன போயேன......

வீர:- அடி சக்கேன்னுனும்! அம்மாம் சந்தோஷமா......?

பொன்:- இருக்காதா அண்ணேன், நம்ம மூதாதைகள், உலகத்திலே பல நாடுகளிலே நாகரீகம் சரியாப் பரவாத காலத்திலேயே, கோட்டை கொத்தளம் கட்டி வாழ்ந்த கதையையும், கப்பலோட்டி வியாபாரம் செய்ததையும், வீர தீரமாகப் போரிட்டு எதிரியை வெட்டி வீழ்த்தியதையும் எடுத்துச் சொன்னபோது, அவ்வளவு பெருமையோட வாழ்ந்த இனம் இப்ப இவ்வளவு தாழ்ந்து கிடக்குதேன்னு தோணுது, துயரம் துளைக்குது.

வீர:- பொன்னு, எனக்குக் கண்ணீரே வந்துவிடும் போலாகிவிட்டது, இங்கே வாழ வழியின்றி, வதைபட்டு, பிழைக்க "தூரதேசம் சென்றுள்ளவர்கள் நாங்கள்" என்று, பர்மா, மலாயா, சிலோன், பம்பாய், ஆமதாபாத் போன்ற இடங்களிலே இருந்தெல்லாம் வந்த பிரதிநிதிகள் சொன்னபோது.........கண்காணுதச் சீமையிலே, நம்ம உடன் பிறந்தாருக கஷ்டப்படறுங்க......வேத்துச் சீமையிலே இருந்து, மார்வாடியும் குஜராத்தியும், சேட்டும் மூல்தானியும் இங்கேவந்து உட்கார்ந்துகிட்டு, கொழுத்துக்கிட்டு இருக்கருங்க............

பொன்:- அவனுங்களுக்குக் கொடி பிடித்துக்கொண்டு கூத்தாடிகிட்டு ஒரு கட்சி 'தர்பார்' நடத்துது......

வீர:- நாம, யார் ஆண்டாலென்னன்னு அக்கரையற்றுக் கிடக்கிறோம்.

பொன்:- அதனாலேதான் நமக்கு அவதிமேலே அவதி, தொல்லைக்கு மேலே தொல்லே!

வீர:- இதைப் போக்கிக்கொள்ள நமக்குச் சக்தி உண்டா இல்லையா என்கிற சந்தேகத்தைத் தான் மகாநாடு துடைச்சிப் போட்டுதே! நாம, ஒத்துமையாக இருந்து உள்ளபடி பாடுபட்டா, நம்மோட உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கிற ஊதாரிகளோட பிடியிலே இருந்து விடுபடலாம்; நிச்சயமாக முடியும்.

பொன்:- விலங்கை அறுத்துகிட்டு, வீரன் கெம்பீரமாக முகப்பிலே தெரிந்தானல்லவா, பந்தலிலே...

வீர:- ரொம்ப உணர்ச்சி ஊட்டிய படம், பொன்னு!

பொன்:- முயற்சி செய்தா, நம்ம தாய் நாட்டுக்குப் பூட்டப்பட்டிருக்கிற விலங்குகளும் அது போலத் தூள் தூளாகும்னு, தெரியுது, புரியுது...

வீர:- ஆமாம், நீ எந்தக் கட்சி பொன்னேய்! தாய்நாட்டுக் கட்சியா? தந்தையர் நாட்டுக் கட்சியா?

பொன்:- ஓஹோய்! நீ அந்த ருசியானவிஷயத்தைக் கேட்கறியா? தாய்க்குலத்தைப் பெருமைப்படுத்தி நம்ம சத்தியவாணி முத்து பேசினதையும், தாய் நாடுன்னு மட்டுமில்லா, தந்தையர் நாடுன்னு பாரதியார் பாடி இருக்கார் ஆகையாலே, தந்தையர் நாடு, என்பதிலேயும் பெருமை உண்டு என்று கருணாநிதி சொன்னதையும் கேட்கறியா...இரண்டும் நிஜம்தான்! இரண்டும் ஒண்ணேதான்! ஒண்ணு இல்லாம மற்றொண்ணு கிடையாது! தந்தையர் நாடு என்று பெருமையாகப் பேசினலும், தாயே! தாயே! உன் உதிரத்தில் எப்படி அம்மா, இப்படிப்பட்ட உலுத்தர்கள் பிறந்தார்கள்? என்று உருக்கமாகக் கருணாநிதி பேசினரே, அப்போது அவர் 'தானகச் சேர்ந்து விட்டார்னுதானே அர்த்தம்?

வீர:- பலே! பலே! ஏது அடுத்த மகாநாட்டிலே நீயே பிரசங்கம் செய்யக் கிளம்பிவிடுவே போலிருக்கே...

பொன்:- அண்ணேன்! நான் சொன்னது, தப்பா?

வீர:- தப்புன்னு எப்படிச் சொல்ல முடியும்! தந்தையர் நாடுன்னு கட்சி பேசி அவரும் தாய் நாட்டுக் கட்சியிலேதான் போய்ச் சேர்ந்தாரு, ஆனு, பொன்னு! அதேபோலே, நாட்டுக்குப் பெருமையே, தாய் நாடு என்பதாலேதான் என்று வாதாடினரே, அவர் பேர், என்ன சொல்லு?

பொன்:- சத்தியவாணிமுத்து

வீர:- சத்தியவாணி மட்டுமல்ல பொன்னேய்! சத்தியவாணி முத்து! தந்தையர் நாடு கட்சியிலே தாய்நாடு கட்சி சேர்ந்துட்டுதேல்லோ...!

பொன்:- அடடே! ஆமாம்! சத்தியவாணி—முத்து...இரண்டும்தான் இருக்கு......!

வீர:- தந்தையர் நாடு—தாய் நாடு முந்தையர் நாடு—எந்தையர் நாடு —நம் நாடு — என்று எப்படிச் சொன்னலும் இனிக்கும் சொல்தான்...ஆனல் இப்போது, வடநாட்டானின் அடிமைக் காடாகத்தானே இருக்கிறது. அதைப் போக்கி, திராவிடநாடு திராவிடருக்கு ஆகவேண்டும் என்பதற்குத்தான், இவ்வளவு முயற்சிகளும் எடுத்துக்கொள்கிறோம்.

பொன்:- தெளிவாக நமக்குப் புரியும்போது, அண்ணேன்! ஏன் இன்னமும் சிலபேர், புரியவில்லை, பொருளே இல்லே, என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள்?

வீர:- பொன்னு, அதற்குக் காரணம் என்ன என்பதைத்தானே, சம்பத் விளக்கிப் பேசியது— கொள்கைக் குழப்பம்......

பொன்:- ஆமாமாம்......நேரு பண்டிதர் நாடு பிரிவினைக்கு 10-வருஷத்துக்கு முன்னாலே கூடச் சம்மதம் சொன்னாராமே, சம்பத் படித்துக் காட்டிவிட்டு, இந்த நேருவுக்கு அந்த நேரு புத்தி

புகட்டட்டும்னு சொன்னபோது, நான் நம்ம காங்கிரஸ் கந்தசாமியைக் கவனித்துப் பார்த்தேன் ..........

வீர:- காங்கிரஸ் கந்தனுக்குக் கோபம் பிரமாதமா வந்திருக்கும்...?

பொன்:- இல்லே அண்ணேன்! ரொம்பவெட்கப்பட்டுப்போனான், நம்ம கந்தன். நான்தொடையைக் கிள்ளி கேட்டேன், என்ன பதில் சொல்லப்போறே கந்தா? 1942ம் வருஷ நேருவைக் கொண்டு 1956ம் வருஷ நேருவுக்கு, எங்க சம்பத்து, புத்திசொல்ல வைக்கிறாரே, இப்ப என்ன சொல்கிறேன்னு, கேட்டேன்.

வீர:- என்ன சொன்னான் கந்தன்? பதில் என்ன சொன்னான்?

பொன்:- சுட்டுத் தள்ளிவிடுவது போல என்னைப் பார்த்துவிட்டு, ......

வீர:- பார்த்துவிட்டு........என்ன சொன்னான்......!

பொன்:- உங்க சம்பத்தா.....உங்க சம்பத்து! நம்ம சம்பத்துன்னு சொல்லப்படாதோன்னு கேட்டான்......

வீர:- அடே, அடே! யாரு காங்கிரஸ் கந்தனா? நம்ம சம்பத்துன்னு சொன்னான்?

பொன்:- ஆமாம்! நம்ம சம்பத்து! நம்ம நாவலரு! நம்ம கழகம்! இப்படித்தான் இப்ப கந்தன் பேச்சு இருக்கு,

வீர:- அப்படின்னா, காங்கிரஸ் கந்தன், இப்ப, கழகக் கந்தனாகி விட்டான்னு சொல்லு...

பொன்:- ஆமாம், நம்ம கந்தனாகி விட்டான்...

வீர:- இதுபோல, நம்ம இனத்துக்காரரு, தெரியாத்தனமாகவும் தெளிவில்லாததாலேயும், கொள்கைக் குழப்பத்தாலேயும், தத்துவ விளக்கம் தெரியாததாலும், விடுதலைக் கிளர்ச்சி அறியாததாலும் நாட்டுப் பெருமையை மறந்ததாலும், திராவிட விடுதலைக்கு விரோதமாக இருக்கிற பலரைத் திருத்தி நமது முகாமிலேகொண்டுவந்து சேர்க்கத்தானே, மகாநாடு நடந்தது...

பொன்:- ஆமாம், இயல்—இசை—நாடகம்—எல்லா வழிகளாலும் இன எழிச்சியும் இன ஒற்றுமையும் காண்போம் என்று சொன்னார்களே மகாநாட்டுக்கு வராமலிருந்துவிட்டவர்களுக்கு, எடுத்துச் சொல்லவேண்டுமே, எப்படி என்றுதான் யோசிக்கிறேன் ......நம்மாலே, இளங்கோபோல் ஆசைத்தம்பிபோல, அருண்மொழிபோல, மனோகரனைப்போல, மதிபோல, கருணாநிதிபோல, சம்பத்துபோல, சீனுவாசன்போல, நாவலர்போல, பாவலர்போலப் பேசவா முடியும்,........

வீர:- ரொம்ப ஜோராப் பேசறியே' நாவலர் பாவலர்—மதி கருணாநிதி—அடுக்கும் மிடுக்குமாக இருக்குதே பேச்சு......நாலே நாளிலே இவ்வளவுக்குத் தயாராகிவிட்டாயே......நம்ம கழகத்தின் 'மாயா சக்தி'யே அதுதானே. ஒதுங்கி இருப்பவர்கள் சிறிதளவு நெருங்கி வருவார்களானால், கழகக் கொள்கையில் பற்றுவைக்கத் தொடங்குவார்கள்—கொள்கையில் பற்று ஏற்பட்டால், மதிதான் பிறகு, நம்ம கழகத்தார் பேசுவதிலே தேனும் தெளிவும் இருப்பது ஏன் தெரியுமோ......கொள்கை அவ்வளவு தரமானது...அதை எடுத்துச் சொல்லும்போது சுவை ஏற்பட்டுத் தீரும்......கொள்கைகளைக் கடைப்பிடித்து, பலர் பட்ட கஷ்டத்தை எல்லாம் நம்ம நடராசன் எடுத்துச் சொன்னாரே, கவனித்தாயா...?

பொன்:- மனசு பாகா உருகிவிட்டது. அண்ணேன்! உத்தமர்களெல்லாம் உழைத்துத்தான் ஒரு உன்னதமான கழகமாக்கிக் கொடுத்திருக்கிறாங்க.

வீர:- நம்ம கழகத்துக்கு இப்பக் காவலராக வந்திருக்காரே நாவலர், அவர்மேலும் இதை மெருகு ஏற்றி வலிவு ஊட்டி, நமக்கு வெற்றி கிடைக்கச்செய்வார்...... அந்த நம்பிக்கையோட, நாமெல்லாம், அவருக்குப் பக்கபலமாக இருக்க வேணும். நமக்கு ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமான திறமையும் செல்வாக்கும், வலிவும் இருக்குதேல்லோ! அதையெல்லாம் கூட்டாகச் சேர்த்து, அவருக்கு ஆயுதமாக்கித்தரவேணும்; அப்போதுதான், வெற்றி நிச்சயமாகும்.

★

# மார்வாடி புத்தி!

—::—

"சென்னை ராஜ்ய மக்கள் தட்சிணப் பிரதேச அமைப்புக்குச் சம்மதிப்பார்களானால், 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சென்னை இராஜ்யத்துக்கு ரூ 100 கோடி அதிகமாகப் பண உதவி செய்வதாக இந்திய சர்க்கார் தெரிவித்திருக்கின்றனர். இந்தப் பண உதவியை நாம் தனி மொழி இராஜ்யம் கேட்டு இழக்கக் கூடாது; தட்சிணப் பிரதேச அமைப்பை ஆதரிக்க வேண்டும்!"

—மராமத்து மந்திரி 'இராமனாதபுரம்'

*

"தட்சிணப் பிரதேசம் வேண்டுமா, வேண்டாமா என்பது வேறு விஷயம்.

ஆனால் தட்சிணப் பிரதேச அமைப்புக்குச் சென்னை இராஜ்யம் இணங்காவிட்டால், அதற்கு நிதி ஒதுக்க முடியாதென்று இந்திய சர்க்கார் கூறியிருந்தார்களானால் அதைவிட ஆச்சரியமான விஷயம் வேறெதுவும் இருக்கப்போவதில்லை!"

—'ஆனந்தவிகடன்'

*

"பச்சையாகச் சொன்னால் தமிழினத்தின் உரிமைவாழ்வை நூறுகோடி ரூபாய்க்கு விலை பேசியது நேரு அரசாங்கம்! உண்மையானால், அரசியல் சரித்திரங்காணாத அயோக்கியத்தனம் என்றுதான் சொல்ல வேண்டும்.

கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தில், சிற்றரசர்களுக்குக் கடன் கொடுத்தும், அரசாங்க உரிமைகளுக்கு விலைகொடுத்தும் பிரிட்டிஷார் இந்தியாவில் அரசியல் ஆதிக்கம் பெற்றார்களே. அதைவிட மோசமானது டில்லியின் போக்கு!

தட்சிண இராஜ்யத்தை ஏற்றுக்கொண்டால் இன்னும் யார் யாருக்கு என்னென்ன பதவிகள் கொடுப்பதாக டில்லி பேரம் பேசியதோ தெரியவில்லை.

ஏன் இந்த மார்வாடிப் புத்தி!

— செங்கோல்

# நமது கண்காட்சி

ப. வாணன்

வள்ளுவர் நகரிலே நான்கு நாட்கள் நடந்த அறிவுப் பணியிலே எங்கள் பங்கு, ஓவியக் காட்சி சாலை. உலகைத்திருத்திய உத்தமர்களைப் பற்றியும், உரிமைக் கிளர்ச்சிகள் நடத்திய புரட்சி வீரர்களைப்பற்றியும், அழகு தமிழிலே இனிது பேசி அங்கு கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்களையும் சிந்தனைக் கடலில் தள்ளினர், நமது தலைவர்கள். நாம் யார் என்பதையும், நமது பணி யாதென்பதையும், நாம் எந்தெந்த புரட்சி வீரர்களின் பரம்பரை என்பதையும், தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டினர், நமது முன்னணி வீரர்கள். செவிக்கு உணவு கொடுத்த நேரம் போக மீதி நேரத்தில், கழகத் தோழர்களின் கண்களுக்கும் அதன்மூலம் கருத்துக்கும் வேலை கொடுத்தது, கண்காட்சி சாலை. அநேகமாக மாநாட்டின் நான்கு நாட்களிலும் ஒரு சில மணி நேரங்கள் உறங்குவதற்கும் உண்பதற்கும் செலவிடப்பட்ட நேரங்கள் தவிர, மீதி நேரங்களில் 'க்யூ' வரிசையில் கழக அன்பர்கள் ஆயிரக்கணக்கில் நின்றுகொண்டு கண்காட்சியைப் பார்த்த காட்சியைக் கண்டவர் என்றுமே மறக்க முடியாது.

ஓவியக் காட்சி சாலைக்குள்ளே நுழைந்ததும், மறைந்த மாவீரர் அழகிரி நம்மை வரவேற்றார். பின் அதன் அழகை அதிகப்படுத்திய சேலம் தோழர் கோபால் அவர்களின் கருத்தோவியங்கள் காட்சியளித்தன. எண்ணத்தை ஓவியத்தின்மூலமாக வெளிப்படுத்தும் இயற்கைக் கலைஞனுக்குள்ள முழுப் பண்பும் திறனும்கொண்ட அவரால் வரையப்பட்ட சுமார் 40 படங்கள், ஒவ்வொன்றும் ஒவ்வொரு கட்டுரைகள். அவைகளிலே சில பெரும் காவியங்கள். சில படங்கள் மனிதவாழ்வின் சோகக்கட்டத்தை விளக்கும் எழிலோவியங்கள். அதைத் தாண்டி நகர்ந்தால் நமது பழனியும் மற்ற நண்பர்களும் வரைந்த பேரறிவாளரின் ஓவியங்கள். ஏழைக்கு ஏற்றம் தந்த லெனின் நிமிர்ந்து நோக்கியபடி அமர்ந்திருக்க, அவர் அருகில் ஸ்டாலினும், மற்றும் வால்ட்டேர், ரூசோ, கரிபால்டி, இப்படிப் பல புரட்சித் தலைவர்களும், அவர்கள் அருகில் ஈன்ஸ்டினும், ரஸ்ஸலும், ஆபிரகாம் லிங்கனும், ஜார்ஜ் வாஷிங்டனும் காட்சியளித்தனர். தலைவர்களைத் தாண்டி அவர்கள் அளித்த அரும்பெரும் கருத்துக்களை எடுத்து விளக்கிய படங்களும் அதற்கு அருகே நமது நாட்டிலே நாம் வணங்கும் கோபி கிருஷ்ணனும் அதற்கு நேர் எதிரிடையாக தோற்றமளிக்கும் சிலுவையிலறையப்பட்ட ஏசுநாதரையும் காண முடிந்தது. நாட்டில் வாழும் நானாவித மக்களின் உடை, தோற்றம் இவைகளை விளக்கும் படங்கள் ஓர் புறமும், அதற்கு அருகிலே நமது நாட்டின் கனிரச வளங்களை விளக்கும் படங்களும் மாட்டப்பட்டிருந்தன.

மனித முன்னேற்றத்திற்கு அடிகோலிய அரும்பெரும் ஆராய்ச்சியாளர்களின் படங்கள் ஒருபுறமிருந்தன. எக்ஸ்ரே கண்டுபிடித்த ரோண்டஜன், நீராவியந்திரம்கண்டுபிடித்த ஜேம்ஸ் வாட், ரேடியம் கண்டுபிடித்த மேடம் க்யூரி, கிருமிகளைப்பற்றி ஆராய்ந்த பாஸ்டர், இப்படி பலப்பல ஆசிரியர்களின் படங்கள். இவைகளுக்கருகில் குறளோவியத்திலிருந்தும் மற்றும் பல பொதுநலக் கருத்துக்களைத் தாங்கிய எழிலோவியங்களை தோழர் இளமுருகு அவர்கள் தோழர் பாலுவைக்கொண்டு உருவாக்கி மாட்டி வைத்திருந்தார்.

பல நாட்டு நாணயங்களும், பல்வேறு விதமான ஏலக்காய்களும், தானியங்களும், மீன் வகைகளும் ஓர்புறம்.

விவசாய இலாகாவினர் விளக்கமான பொருட்காட்சி மற்றோர்புறம்.

இவைகளையெல்லாம் தாண்டிப் போனால் மாணவத் தோழர்களின் விஞ்ஞானக் காட்சிகள். "ஐயோ வெட்கமாயிருக்குது அத்தான்!" என்று ஆரம்பித்து, "தொட்டால் சுட்டிடும்" என்று முடியும்வரை விதவிதமான விஞ்ஞான அதிசயங்களை செய்து காண்பித்தனர் நமது மாணவமணிகள். அங்கே சென்று தங்கள் நரம்புத் தளர்ச்சியையும் ஞாபகசக்தியையும் பரிசோதித்துக் கொண்டவர்கள் ஏராளம். ஆரம்ப முயற்சியானாலும், அதிகமான மக்களின் கவனத்தை இழுத்தது விஞ்ஞானப் பகுதி.

மொத்தத்தில் மிக மிக வெற்றியடைந்த ஒரு முயற்சி கண்காட்சி சாலை. நாங்கள் சுமார் இருபதுபேர் அங்கு தொண்டாற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. வரலாற்றில் இடம் பெற்ற 2வது மாநில மாநாட்டிலே எங்களுக்கும் பணி செய்யும் பொறுப்பு கிடைத்ததே என்று பெருமகிழ்வில் தொண்டாற்றினோம். அங்கு கூடி வேலை செய்த எங்களுக்கே ஒருவரை ஒருவர் இதற்குமுன் அறிமுகம் கிடையாது. இனியும் மறுபடியும் நாங்கள் ஒன்றுசேர்ந்து பணியாற்றும் சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. ஆனால், இப்பொழுதும் எப்பொழுதும் எங்கள் மனதில் அந்த நாலைந்து நாட்களும் திரள் திரளாக மக்கள் வந்து அந்த ஓவியக்காட்சியைக் கண்டு களித்ததை எங்களால் மறக்கமுடியாது. நாம் செய்த சிறு தொண்டு, பெருவாரியான மக்களின் பேரானந்தத்திற்கு வழிகோலியதே என்று எண்ணும் போதே எங்களுக்குப் பெருமகிழ்வு எய்தியது. உழைப்பிலே, பொது வாழ்விலே இன்பம் இருக்கிறது என்பதைக் கண்கூடாகக் கண்டோம்; மகிழ்ந்தோம். இப்படிப் பட்ட ஒரு சந்தர்ப்பத்தை அளித்த மாநாட்டு நிர்வாகிகளை வாயார வாழ்த்தினோம்.


கண்காட்சியைத் திறந்து வைத்த நமது உதவி பொதுச் செயலாளர், "ஏதோ ஒரு அளவில் காட்சி அமைத்திருக்கிறோம்......" என்று குறிப்பிட்டார். உண்மை தான். ஏதோ ஒரு அளவில்தான் இருந்தது.

நமது காட்சி சாலையிலே பிரஞ்சுப் புரட்சியின் வரலாறும், ரஷ்யப் புரட்சியின் பல்வேறு அம்சங்களும் தனித்தனி அங்கங்களாக இருக்க வேண்டும். உலகின் பல்வேறு நாடுகளின் நிலப்பரப்பும், மக்கள் தொகையும், வளமும் காட்டும் படங்கள் ஏராளமாக வேண்டும். வரலாற்றைக் கறைப்படுத்திய வாட்போர் வீரர்களின் படங்களும், களங்கம் நீக்கி, மக்களை உயர் கருத்துக்கு இழுத்த எண்ணற்ற சிந்தனை சிற்பிகளின் உருவங்கள் இடம்பெறவேண்டும். இவைகள் அடங்கிய ஓவியக் காட்சிகளை எடுத்துக்கொண்டு கிராமம் கிராமமாக நமது தொண்டர்கள் சென்று விளக்கி வருவார்களானால் நமது அறிவுப் பிரச்சாரம் புயல் வேகத்திலே பரவும். பிரசங்கத்தோடு, கண்ணாலும் கண்டால், அறிவு வளர்ச்சி நிச்சயமாகப் பெருகும்—சீக்கிரம். அறியாமையில் ஆழ்ந்து கிடக்கும் நமது சகோதரர்களின் அறிவுக் கண்ணைத் திறக்க இதை விட அரிய சாதனம் வேறில்லை.

போப்பாண்டவரின் கொடுமையினை எதிர்த்த லூதரும், அவர் தொண்டர்களும் ஐரோப்பாவிலே மதப் புரட்சி ஏற்படுத்தியதே "கார்ட்டூன்"களால்தான் என்பது வரலாறு.

★

REGD. NO. M. 4642 போன் நெ. 15




காஞ்சீபுரம், ௯௫, திருக்கச்சிநம்பி தெரு 'திராவிடநாடு' அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.